உ

ஓம் தத்சத்.

சற்குரு துணை.

சத்திய சன்மார்க்கப்பிரகாசிகை

இரண்டாம்பாகம்

இது

சிதம்பரம்

ஸ்ரீ முத்துராமலிங்க சுவாமிகளால்

இயற்றப்பட்டு,

வேலூர்

பச்சையப்ப அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1917

உ

விநாயகர் வணக்கம்

மாதங்கமாமுகனை வந்திப்பார்க்கெஞ்ஞான்றும்
ஏதங்கள் வாராதென்றெண்.

உ

சத்திய சன்மார்க்கப் பிரகாசிகை

இரண்டாம்பாகம்

எம்மார்க்கத்தோமும் இகல் அற்றிருக்குமதே சன்மார்க்க மாகு நெறிதான் என்னும் ஆன்றோர் வாக்கியத்தைத்தழுவிச் சன்மார்க்கத்தியல்பும், அங்கிலக்கணின்றனுட்டிக்கவேண்டிய கிரமங்களும், அதனல் அடையப்படும் பெரும்பயனும், பிரபலப் பிரமாணவாயிலாக அவற்றின் பொதுவியல்புகளை முதற் பாகத்திற் சுருக்கமாய்க் கூறினும்.

அவற்றுள் இறுதிக்கண் வரைந்துள்ள வின்ப நிலையே யெவரும் விரும்பி முயன்றடைதற்குரியதாதலால் அதனையுறுதற்குரிய அந்தரங்க பகிரங்க சாதனங்களும் அச்சாதனத்தைக்கொண்டு சாதித்துப்பெறுதற்குரிய அதிகாரமுடையார் இன்னுரென்பதும், சாதகம் செய்யும் முறையும், அதனுற் பெறும்பேறும், பெற்றுரியல்பும் ஆன்றோரருளிச்செய்திருக்கின்ற நூன்முறையே

ஈண்டிறைவன் திருவருளைச் சிந்தித்துத் துதித்து வணங்கி அத்திருவருட்சகாயத்தாற் சிறிதுவிளக்குதும். வளம்படவேண்

டாதார் யார் யாருமில்லையென்னும் மேலோர் வாக்கியத்திற்
கியையச் சுகத்தை விரும்பாத எந்தச்சீவர்களுமில்லை மெய்
யுணர்வுடைய பெரியார் அம்மெய்யுணர்வைப் பெறவிரும்பும்
பக்குவசீலர்கள் தவிர உலகியலிலுள்ள அனைவரும் ஆராயு
மிடத்து இன்பம் சிறிதுமில்லாத மாயாகாரியமாகிய போகங்
களையே சுகமெனக்கருதி அப்போகநிமித்தம் வருந்திமுயன்
றயின்று துயின்று உழன்று சுழன்று வீண் வார்த்தைகள்
நவின்று தங்கள் வாழ்நாள் களை வீணாளாகக் கழிக்கின்றார்
கள் என்பது காட்சிப் பிரமாணவாயிலாக விவேகிகள் யாவருக்
கும் பிரசித்தமாய்த் தெரிந்தவிஷயமே இதுபற்றியன்றோ
ஸ்ரீ தாயுமானசுவாமிகள் முதலிய பெரியார் தாங்கள் திருவாய்
மலர்ந்தருளிய திருப்பாடல்களில் உலகியலை நன்குவிளக்கிக்
காட்டியிருக்கிறார்கள். அவ்வைகளிற் சில கூறுதும். உ-ம் ஸ்ரீ
தாயுமானசுவாமிகள். பொய்திகழுமுலகநடையென்சொல்கே
னென்சொல்கேன் பொழுதுபோக்கேதென்னிலோ பொய்யுட
னிமித்தம் புசிப்புக்கலைந்திடல் புசித்தபின் கண்ணுறங்கல்
கைதவமலாமலிது செய்தவமதல்லவேகண்கெட்டபேர்க்கும்
வெளியாய்க் கண்டதிது விண்டிதைக் கண்டித்து நிற்றலெக்
காலமோ வதையறிகிலேன்—என்றும், பட்டினத்தடிகள் உண்
டதேயுண்டு முடுத்ததேயுடுத்து மடுத்தடுத்துரைத்ததேயுரை
த்தும் கண்டதே கண்டுங் கேட்டதே கேட்டும்—என்றும். சிவ
ப்பிரகாச சுவாமிகள் (சோணசைலமாலை) வினைவழியுடலிற்க

மைத்தவே யுலகர் வேண்டிலர்—என்றும், திருக்குறுந்தொகைத் தேவாரம்,—பூக்கைக்கொண்டரன் பொன்னடி போற்றிலார் நாக்கைக்கொண்டரனும நவில்கிலார், ஆக்கைக்கேயிரைதேடி யலமந்து, காக்கைக்கே யிரையாகிக் கழிவரே — என்றும், திருத்தாண்டகம்—பொய்யாருவாறே புனைந்து பேசிப் புலர்ந் தெழுந்த காலைப் பொருள்கள் தேடிக், கையாருக்கரணமுடை யோமென்று களித்த மனத்தராய்க் கருதிவாழ்வீர்.—என்றும், வாசிட்டம்—உண்டவின்பமே மீளவு முண்கின்ற தொருநாட், கண்ட காட்சியே மீளவுங் காண்கின்றது வந்து, கொண்ட சோலமே மீளவுங் கொள்கின்றதென்றால், விண்ட மேலவர் நாணுறுதொழிவரோ வெறுத்து—என்றும், மற்றும் வருவன வற்றுற் காண்க. ஆகவே, இனிச்சுகமாவது யாது, அது எத் தனை வகைத்து, அவற்றுள் கொள்ளற்பாலது யாது, தள்ளற் பாலது யாது, எனிற் கூறுதும்.

வாஞ்சித வஸ்து லபித்து அதனை நுகரும்போது சந்தோ ஷரூபமான சாந்த விருத்தியின்கண் சுகமாயெழுவதான அனு பூதி வாழ்வென்று சொல்லப்படுவதே ஆனந்தலட்சணமாம் இவ்வானந்தம் ஆன்மதத்துவத்தெழாநின்றதேயன்றி விஷயத் தின்கண் சிறிதும் ஆனந்தமில்லை உண்டெனின் யாதொரு விஷயத்தால் எந்தப்புருஷனுக்கு சுகமுண்டாமோ அதனுலே அன்னியனுக்குத் துக்கமுண்டாகிறது அதெங்ஙனமெனில் அக் கினியின்பரிசத்தால் அக்கினிகீடத்துக்கும்சர்ப்பசிம்மங்களின்

உருவங்களைக் காண்டலால் சர்ப்பனிசிம்மனிகளுக்கும் ஆனந்த முண்டாகின்றது அஃதுண்டாகவேண்டுவதில்லை. சித்தாந்தத்திலோ அக்கினி கிடத்துக்கு அக்கினியின் பரிசவிச்சை உண்டாமேல் அப்பெழுதுசொருபானந்தத்தின்பானமுண்டாகிறதில்லை அக்கினிசம்பந்தத்தால் க்ஷணமாத்திரம் இச்சை நீங்கி நிச்சல புத்தியின்கண் சொருபானந்தத்தின்பானம் உண்டாகின்றது ஆதலால் இச்சைமுதலியவற்ருன் அபாவரூபநிமித்தத்தால் ஆனந்தத்தைக்கவர்வதாய் அந்தர்முக விருத்திஎப்படி உண்டாகிறதோ அப்படி வாஞ்சித விஷயலாபத்தால் உளதாகும் இச்சைமுதலியவற்றின் அபாவத்தால் ஞானத்திற்குப்பின்னர் அந்தர் முகவிருத்திஉண்டாய் அதனுல் அந்தக்கரண உபகித ஆனந்தமே கவரப்படுகின்றது அச்சொருபானந்தத்தின் கவர்ச்சியும் விஷயத்தின் ஞானமும் அத்தியந்தம் அவ்வியவகிதமாயிருத்தலின் புருஷனுக்கு யான் விஷயத்தில் ஆனந்தம் அனுபவித்தேன் என்னும் பிராந்தி உண்டாகின்றது, என்று மேலோர் கூறியிருக்கின்றனர். இதற்குதாரணம் வாசிட்டம்

அறிவானும் அறிபுலனும் கூடிய கூட்டரவிலெழும் அறிவானந்தம், பிறியாத ஆன்மதத்துவத்தெழுந்ததாம். இதனைப் பேணல் வேண்டும்—என்றும்

(வைராக்கியதீபம) தோன்றிநின்றழியப்படுங்கொடுபிறப்பிற்றுன்பமேயன்றியெட்டுணையும் ஊன்றி நெஞ்சகத்தோர்ந்திடிற் பிறிதிலையாலுண்டு போற்றிரித்துயிர்க்கெல்லாந், தான்

றிகழ்ந்திடுமோர் வகற்றிருளிருளுந்தவிர்ந்து மற்றதுமுளபடி யே, யான்ற வீடுறமுற்பவந் தவம்புரிந்தோரகத்தினுட்டெரி தருமன்றே.—என்றும், நாயானது பஸ்சயற்ற எலும்பைத் தன்பற்களாற் கடிக்கும்போது தன்னிடத்துதித்த இரத்தத் தை எலும்பின்கண் உண்டானதென்று கருதிச் சுவைத்து மகிழுந்தன்மைபோன்றிருக்கிறது. ஒருவனுலக போகத்தி லின்புறுதல் என்றுகூறும் ஒழிவிலொடுக்க வெண்பாவினாலும்

திருவாசகம்

நோயுற்று மூத்து நானுந்துகன்றாயிங்கிருந்து, நாயுற்ற செல்வம் நயந்தறியா வண்ணமெலாம், தாயுற்று வந்தென்னை ஆண்டுகொண்ட தன்கருணைத், தேயுற்ற செல்வர்க்கே சென் றூதாய் கோத்தும்பி-என்றும், அன்றி,போகம் வேண்டிவேண் டிலேன் புரந்தராதியின்பமும் எசநின் கழலிணையலாதிலேன் என்றும், தேவாரம்—என்னில் யாருமெனக்கினியாரில்லை யென்னினு மினியானொருவனுளன்—என்றும், கனியினுங் கட்டிபட்ட கரும்பினும், பணிமலர்க்குழற் பாவை நல்லாரினும் தனிமுடி கவித்தாளுமரசினும், இனியன் தன்னடைந்தார்க் கிடைமருதனே என்றும், அருளிச்செய்திருக்கின்ற திரு வருட் பாசுரங்களாலும், நாலடியார்—மறிகுள குண்டன்ன மன்னா மகிழ்ச்சி,என்றும்,சிவஞானசித்தியார் ஆசையுற்றுழல்கு கரங்களசுத்தமேவிய ளைந்துதின், றேசுகித் தனவாயிடுஞ் சுக மேழையோடுறுமின்பநீ மாசதற்றெருளிர் நித்தசுத்த வளர்

தருஞ் சுகவாரிகாண், ஈசனுக்கடிமைத்திறத்தினியைந்து நாம் பெறுமின்பமே என்றும், மற்றும் வருவனவற்ருற் காண்க.

ஆனந்தம் எத்தனை வகைப்படும் எனின், விஷயானந்தம் பிரமானந்தம், வாசனுனந்தம், முக்கியானந்தம், நிசானந்தம், ஆன்மானந்தம், அத்துவிதானந்தம், வித்தியானந்தம் என எண்வகைப்படும். (அவற்றின் ரூபங்களாவன)

இஷ்டவிஷயங்களான மாலை முதலியவை உற்றவைகளை அனுபவிக்கும்போது நிராசையினேதுவாலுளதாகு முண் முக மனேவிர்த்தியின்கண் யாதொரு ஆன்ம சொருபானந் தோதயமாமோ அது விஷயானந்தமாம், சுழுத்திகாலத்தில் சொப்பிரகாசமான யாதொரு சுகமுண்டோ அது பிரமானந்த மாம், கரண சம்பந்தமுள்ள புருடனுக்கு மயக்கத்தையுடைய சுழுத்தியின்கண் அனுபவித்த பிரமானந்தத்தின் வாசனை, பின்னர் சொற்பகாலம்தொடர்ந்திருப்பதால் வாசனுனந்தமாம் பிரிய வஸ்துக்களுள் யானே அதிகப்பிரியனென்னும் விவேகத் தாற்ருேன்றுமானந்தம் ஆன்மானந்தமாம்; சமாதியின்கண் நிராவரணமாயுதிக்குமானந்தம் முக்கியானந்தமாம்; உதாசின காலத்திலுற்றவானந்தம்; நிசானந்தமாம்; துவிதத்தை மாயா மயமென்றபேடசித்து அத்துவிதமான தன்னை நாடாநிற்கும் விவேகத்தாற் ருேன்ரு நிற்குமானந்தம் அத்துவிதானந்தமாம்; மஹாவாக்கிய விசாரத்தாலுண்டாகாநின்ற சமுசயரகிதமான; ஞானத்தால் அந்தக்கரண விருத்தியாலுதயமா மானந்தம் வித்தியானந்தமாம்.

முக்கியானந்தம், ஆன்மானந்தம், அத்துவிதானந்தம் இம்மூன்றும் பிரமானந்தத்திற்கு வேறின்மையின் பிரமானந்தத்தில் அந்தர்ப்பாவமாம். என்னை, பிரமானந்தந்தானே அதிவிவேகிக்கு யோக ரூப உபாயத்தால் முக்கியானந்தமாகவும் மந்தப்பிரஞ்ஞையுடைய சிஞ்ஞாசுக்கு ஆன்மானந்த விவேக ரூபவாயிலாக பரம பிரேமாஸ்பத ஆனந்தமாகவும் வெளிப்படலானும் தைத்திரிய சுருதியிற்கூறியஆகாச முதற்றனது தேக பரியந்தமான ஜகத்து ஆனந்தத்தின் அன்னியமல்லாமையின் ஆன்மானந்தத்துக்கு அத்துவிதீய பிரமத்தன்மை உண்டென்று பஞ்சதசியிற் கூறியிருத்தலினனும் சுழுத்தியின்கண் சுவப்ரகாசமாயுள்ள பிரமானந்தத்தில் முக்கியானந்தம் ஆன்மானந்தம், அத்துவிதானந்தம், மூன்றும் அந்தர்ப்பாவமாம் என்பர், (அந்தர்ப்பாவ முள்ளடங்கிருப்பது) ஜன்னியமாகலான் விஷயானந்தம், வாசனானந்தம், அமுக்கியம், ஜனகம், ஆதலால் பிரமானந்தம் முக்கியம். பிரமானந்தத்திற்கும் முக்கியானந்தத்திற்கும், பேதமில்லை. சுகதுக்க ரூப நிமித்தத்தாலுண்டாகாநிற்கு மிராகத்துவேஷங்களின் அபாவ காலத்தை உதாசீனத்துவமென்றும் தூஷ்ணீம் பூதாவஸ்தையிலுள தாகும் ஆனந்தம் இங்கே கூறிய வாசனானந்தத்தில் அந்தர்ப்பாவமாம். இவ்விரண்டும் நிர்விஷயமாகலின், விஷயானந்தம் போல வித்தியானந்தமும் அந்தக்கரணவிர்த்தி ரூபமேயாதலால் விஷயானந்தத்தில் அஃதந்தர்ப்பாவமாம் என்றுணர்க

புத்தியானது சர்வதிருசியங்களையும், ஸ்மரியாமல் சூட்சுமத் தன்மையன்டயின் அப்போது நித்திரையுண்டாம். அவ்வா றின்றி நிர்மல சுழுத்தியென்னும் நனவிற் சுழுத்திநிலை வருமாயின் பிரமாகாரமாகிய ஸ்திதியே முக்கிய நிசானந்தமாம். எத்துணை யெத்துணை சித்தத்தின் சூட்சுமத்தன்மையுண்டாமோ, அத்துணையத்துணை முக்கியநிசானந்தம் ஆவிர்ப்பாவமாம் என்பர்.

ஆன்மசொரூபானந்தந்தானே யோகாப்பியாசத்தால் முக்கியானந்தமாக வெளிப்படுகிறதென்றும் சார்வபௌமாதியானந்தங்கள் இதனது லேசமென்றும் கூறுவர். ஆகவே இச்சிவானந்தமொன்றே கொள்ளற்பாலதாம். விடயானந்த முதலியவை தள்ளற்பாலனவாம்.

ஈண்டு கூறப்படும் ஆன்மா சிவசொரூபமாகிய பரமான்மாவே ஆதலாற் சிவானந்தமெனக் கூறலாயிற்று.

இதற்குதாரணம்

மன்னராவாருறு சுகமும்வானோர் மகிழ்ந்து பெறுசுகமும் மணிப்பைநாகத்தவர் சுகமும் மற்றையோர்களடைசுகமும், பன்னுமிடத்திற் சிவத்தெழுந்த பரமானந்தலேசமெனப்பகர்ந் தாய் குருவாயெழுந்தருளிப்படிறேன் மறந்திங்குழல்கின்றேன் கன்னலெழுந்ததெளி சாறேகட்டிமாவின் றீங்கனியே கதலிக்கனியே நற்பலவின்கனகச்சுளையே கதிமுளையே, பொன்னம் பொருப்பே என் விருப்பே போதச்சுகமே கிஞ்சுகமே புரண

ஒளியே உள்ளொளியே போரூர் முருகப்பெருமாளே—என்று கூறும் மேலோர் திருவாக்காலுணர்க.

இவ்வாறு ஞானசாத்திரங்களாலும் சிவானுபூதிச்செல்வர்களாகிய பெரியோர்களாலும் கூறப்பட்டுள்ள சாத்திய நிருவிகற்ப சமாதியினுளதாகும் பரிபூரண பரமானந்தானுபவநிலையை அடைந்த பெரியோர்களே பின் அனுபவாதீத நிலையுடையராய்ப் பிறப்பறுவர் என்றுணர்க. இதற்குதாரணம் ஸ்ரீ தாயுமானசுவாமிகள்

நினைவொன்று நினையாமல் நிற்கினகமென்பார் நிற்குமிடமேயருளா நிட்டையருளொட்டும், தனையென்று மறந்திருப்பவருள் வடிவானதுமேற்றட்டி யெழுந்திருக்குமின்பந்தன்மயமேயதுவாம், பினையொன்று மிலையந்தவின்பமெனு நிலையம் பெற்றாரே பிறவாமை பெற்றார் மற்றுந்தான், மனையென்று மகவென்றுஞ் சுற்றமென்று மசுத்த வாதனையாமாசையொழி மன்னொருசொற்கொண்டே—என்றும், பிரபோதசந்த்ரோதயம்—ஆயத்தக்கது வேதத்தின் அந்தமே ஆய்ந்தால், ஓயத்தக்கது வேட்கையின் பெருக்கமே யொருவன், எயத்தக்கது பரம்பரன் கருணையேயென்றுந் தோயத்தக்கது ஆனந்தவாரிதி துணிபே.

இனி ஆனந்தானுபவம் பெறுவதற்குரிய முக்கியசாதனம் யாதெனில், தத்துவஞானம், வாசனுட்சயம், மனோநாசம் முதலியவாம்.

இவற்றுள், தத்துவஞானமாவது, உண்மைஞானம் அல்லது யதார்த்தஞானம்.யதார்த்த தத்துவத்தை அறிகிறபடியாலிதற்குத் தத்துவஞானமென்று பெயராயிற்று. வாசனக்ஷயமாவது, வாசனையின்நாசம், வாசனை யென்பதியாதெனில் முன்பின்ஒன்றையும் ஆலோசியாமற்றிடபாவனையால் உண்டாகும் குரோதாதிவிருத்திக்கேதுவானசித்தத்தின் சூட்சுமாவஸ்தையாகிய சமஸ்காரம் (ஆதலால்) இந்தவாசனை அநாதிகாலந்தொட்டு இருதயத்தில் வசிக்கிறபடியினுல் வாசனை யென்று பெயாரயிற்று. இதின்நாசம் அல்லது க்ஷயமாவதியாதெனில் விவேகஜந்யமாயிருக்கிற, சாந்தியாதிவாசனை திடமாகும்போது, பாகியநிமித்தத்தினுலே, குரோதாதிவிருத்தியுண்டாகாமலிருக்கிறதே, வாசனக்ஷயம். மனோநாசமாவதியாதெனில், தீபச்சுவாலையின் பரம்பரைபோலவிருத்திகள் பரம்பரை ரூபமாகப்பரிணமத்தையடைகிறதேமனம். இந்தமனமானது அதுஇது அப்படி இப்படி அதுகூடு மிதுகூடாது அதுநல்லது இதுபொல்லாதது, அதைச்செய்யவேண்டும் இதைவிடவேண்டும் என்றிவைசளைமனனம்பண்ணுகின்றமையால் இதற்குமனமென்றுபெயராயிற்று, என்றுஜீவன் முத்திப்பிரகரணமுதலியநூல்களிற்கூறப்பட்டிருக்கிறது. இம்மனம் நாசமாவதியாதெனில், பரிணமசலனவேதுவானவிருத்திநீங்கிநிரோதாகாரமாகப்பரிணமிக்கிறதே மனோநாசம். இப்படிப் பதஞ்சலி பகவானியற்றியயோக சாஸ்திரசூத்திராநுசாரமாக ஸ்ரீவித்தியாரணிய சுவாமிகளருளிச்செய்திருக்கிறூர்கள்.

மற்றும் சாவயவமாய், அநித்தமாய், அரக்குச்சுவர்ணம் மெழுகு முதலியவைபோல வெகுவிதபரிணமயோக்கியத்திரவியம்யாது அதுமனது, நேத்திரமுதலிய இந்திரியங்களாற் கடபடாதி விளங்குவபோலச்சாட்சியாகிய பிரத்தியகான்மாவாலே பிரகாசமாக விளங்குவனவான காமக்குரோதாதி விருத்திகட்கு உபாதான காரணமாயிருப்பதுமனது, கண்ணுக்கெதிரே வெளிச்சத்திலிருக்கும் கடபடாதியும் காதுக்குச்சமீபத்திற்றிடமாயுச்சரிக்கும் சத்தமும், யாதொன்று சாவதானமாயில்லாவிடில் அறியப்படாமல், யாதொன்று சாவதானமாகவிருந்தால் அறியப்படுகின்றனவோ அதுவே அந்நுவய வெதிரேகங்களால், சகலவிஷய ஞானத்திற்கும் சாதாரணகாரணமான மனதென்று பிருகதாரணிய உபநிடதத்திற் கூறியிருக்கின்றதென்றும் ஸ்ரீ வித்தியாரண்ணிய சுவாமிகள் விஸ்தாரமாய்ச் செப்பியிருக்கின்றாரவைகளின் விபரம் பின்னர்க்கூறுதும். எவ்விதத்தாலும், மனனம்பண்ணுகின்றமையான் மனதெனக் கூறுவதியாவர்க்குமுடன் பாடேயாம்.

தத்துவஞானம் வாசனக்ஷயம். மனோநாசமிம்மூன்றும் வெகுகாலபரியந்தம் சமமாக அப்பியாசிக்கப்பட்டால் அவை பலத்தைக்கொடுக்கும். அப்படியின்றி, ஒரோர்காலமொவ்வொன்றாக எவ்வளவுகாலமப்பியாசித்தாலும், அவைபலத்தைப்பயவாது எதுபோலெனின் பஞ்சாக்ஷராதி மந்திரங்களில் நாளொன்றுக்கோரக்ஷரமாக எவ்வளவுகாலம் செபித்தாலும்

அவைகளெப்படிப் பயனைக்கொடாதோ அதுபோலத் தத்துவஞானாதிகளின் அப்பியாசமும், சாஸ்திரங்களிற்கூறிய சித்தியைக்கொடாதாதலாலிம் மூன்று மொருங்கே நெடுங் காலம் நேசத்தோடு நிரந்தரம்பழகிப் பயனடையவேண்டு மென்றதற்குரியவுபாயங்களைப்பல பிரகாரம், வசிட்டபகவான் வாசிட்டத்திற் கூறியிருக்கின்றார், வாசிட்டம், உபசாந்தப் பிரகரணம், உண்மை ஞானமெம்மட்டும் வாராதம்மட்டுளமழி யா,திண்மையுள மெம்மட்டழியா திகழ்தத்துவமம்மட்டெய்தா தண்மையுறு வாதனையெம்மட்டழியாதம் மட்டுணர்வனாகா வண்மையுணர் வெம்மட்டனாகா வருவாதனை யம்மட்டழியா எ-ம். செறிவாஞானமனமாய்வு திரள்வாதனைமாய் விம்மூன் றும் பிறவாங்காரணங் கடமைப்பெறு சாதித்தற்கரிதாகும், நெறியாமதனால்வி வேகிகளானிலைகூர் புருடவருத்தத்தாற் பொறியார்போகமயல் தூரப்போக்கிலிவைதாம் பொருந்து வதாம் எ-ம்.

இனையமூன்றுஞ் சமமாகவியற்றா வெம்மட்டம்மட்டும்
அனையபத மெய்தாவருட மாயிரங்கள்சென்றாலும்,
வினையில்காலஞ் சமமாகமிகுநாளியற்றின் மிகப்பலிக்கும்
நினைவிலொன்றொன்றா வியற்றினிலைகூடா நிட்பல
மாகும் எ-ம்.

மற்றும் வருவனவற்றாற் காண்க,

ஞானத்தின்பாகுபாடு கலைஞானம், பரஞானம், என்றிரு திறப்படும்,இவற்றையே,பரோக்ஷஞானமென்றும் அபரோக்ஷ ஞானமென்றும் செப்புவர். கலைஞானமாவது, சுருதிவிசாரஞ் செய்து பொருள் நிச்சயிக்கப்படும் ஞானமாம். பரஞானமாவது இறைவன் றிருவருளாற்பாசநீங்கி, யத்திருவருளோடுங் கூடி இரண்டற நின்றனுபவிக்கிற ஞானமாம்.

இதற்குதாரணம். சிவப்பிரகாசம்.

கிரியையென மருவுமவையாவும் - ஞானம் கிடைத்தற்கு நிமித்தமென்னுஞ் செய்யுளில், மாறுமலமகலவகலாத மன்னு போதத்திருவருளொன்,றுன்றதனைத் தெளியவோதுஞ் சிவாகமமென்றுலகறியச் செப்புநூலே எ-ம். சசிவன்னபோதம்.

பரவறிவு அபரவறிவெனவுமிருபரிசாம், எ-ம் ஆகமவிதங்களறிவாரபர மறிவார் - யோகமொடுறெங்குமவரேபர முணர்ந்தோர் எ-ம்.

மற்றும் வருவனவற்றுற் காண்க.

இவ்வாறன்றி நூலாராய்ந்து துணிதலாகிய நிச்சயஞானத்தையே பரஞானமெனக்களிப்பவர் முக்கியபலத்தையடையார்கள் ஆதலாலது குற்றமுடைத்தே - இதற்குப்பிரமாணம் ஸ்ரீ தாயுமான சுவாமிகள்—சின்னஞ் சிறுபிள்ளைகள் செய்த மணற்சோற்றையொக்கும் மன்னுங்கலை ஞானமார்க்கம் எ-ம். சிவஞானசித்தியார் ஞானத்தால் வீடென்றே யென்னும் செய்யுளில் - ஈனத்தார் ஞானங்களல்லா ஞானம்இறைவனடி

ஞானமேஞானமென்பர் எ-ம். பரஞானத்தாற் பரனைத்தரிசிப் போர் என்று கூறப்பட்டுள்ளச்செய்யுட்களாலும் திரிவிதவுல கத்தரிதொருஞானி தேர்விடத்தென்று மோரொன்லைற-யுரை செயிற்பிரமவித்தை யொத்தரிதோவென்று மிவ்வுலகுலைரப் பதனால் அரிசொல் கீதையிலும் பிரமசாதகரினார்க்குளவருத்த மென்பதனாற் - பெரியதோர் வருத்தமெனை மறைதுணிந்தப் பிரமனானெனவிருத்தலினே எ-ம். சிறியவர்மணற் சோறுண்டு தேக்கிடல்போற்றேர்ந்து நூறெளிந்த மாத்திரத்தினறிதரிற் சிவமும்விடயமாமென நீத்தகத்திருளறுதுவைத்தந்தோ உறு மகம் பிரமமெனவுரைத்திறு மாந்துறைதலோ ஞானமஞ்ஞா னந்துறவினை யுறுதுமாயுமோவாயாற் சுடரெனிலிருள்து மிங் கிடுமே எ-ம். என்று வைராக்கிய தீபத்திற் கூறப்பட்டுள்ள செய்யுட்கள் முதலியவற்றானும் மற்றும்வருவனவற்றாலுங் காண்க. இனி - ஞானமும்வீடும், இவைகளைமுறயே அடைய வேண்டிய கிரமங்களும் அடியிற்கண்ட செய்யுட்களினுரை யாலுணர்க. அவையாவன.

வைராக்கியதீபம் 34,35,36,37-வது செய்யுட்களேயாம். 34வதுதேர்ந்திடினபரம்பரமெனவிரண்டாய்த்திகழ்தருஞான மாங்கவற்றா, டோர்ந்திடின்மறையாதிய கலையபரமுயிர்பர னாடு விரவியக்கங் கூர்ந்துணருணர்வே பரமதைத்தெளியக் கூறன் மாத்திரங் கலைஞானஞ், சார்ந்துணர்வரிதப்பரனை யோர்ந்தன்றிச் சாற்றினவ்வயிக்கமாந்தலமே. எ-ம். மற்றும் வருவனவற்றாற் காண்க.

மேற்கண்டபாடல்களின் பொருள், (34-வது.) ஞானத்திலக்கணம் யாதென்று கேட்ட சீடனை நோக்கிக் கூறுகின்றார் விசாரிக்குமிடத்தில் ஞானந்தான், அபரஞானமென்றும் பரஞானமென்றும் இரண்டு பிரகாரமாய் விளங்காநிற்கும், அந்த அபரஞான பரஞானங்களின் இலக்கணம் யாதென்னின், அவ்விரண்டினுள்ளும் ஆராயப்பட்ட வேதாகம முதலியகலைகளையோதியுணர்ந்து பொருணிச்சயம் பண்ணுதல் அபரஞானம், உயிரானது, பரனுடனே, கலந்து ஐக்கியக்கூடுதலை நுண்ணியதாக அறியுமறிவே பரஞானம். ஆனால் அபரஞானத்திற்பயனில்லையோவென்னின், பரஞானத்தைத் தெளிவுபடச்சொல்லுதன்மாத்திரமேயாம். ஆனால் அவ்வைக்கியத்தையறியும் நெறியாதெனின், பொருந்தி அறிதற்கரிது. மேற்கூறியபரனையறிந்தாலன்றிச் சொல்லுமிடத்தில் அந்தஐக்கியமாகியதலம். (ஆனால் அந்தப்பரனையறியும் நெறிதான் எங்ஙனமென்ற சீடனை நோக்கிக்கூறுகின்றார்.) (35-வது.) இந்தவுடம்பின் கண்ணே பொருந்தியிருக்கின்ற இச்சீவனது இயல்பை அறிந்தாலன்றி அப்பரனையறியக்கூடாது, ஆனால் அச்சீவனை அறியுமுறைமைஎங்ஙனமெனின், அஞ்ஞானத்தைக் கெடுத்தாலன்றிச்சீவனையும், அறிந்தொருவருங்கிட்டக்கூடாது ஆனலிந்த அஞ்ஞானத்தைக் கெடுக்குமுறைமை யெங்ஙனமெனின், நனவிற்சுழுத்தி எவனுக்குடையது அவன் அவ்வஞ்ஞானத்தைக்கெடுப்பன். ஆனால், அந்நனவிற்சுழுத்திவரு

நெறி எங்ஙனமென்னின், அந்தக்கரண வாதனைகளை யொழித்தால் அபாவமென்று சொல்லப்படும் நனவிற்சுழுத்தியும் எளிதில்வந்து உதயமாம் (ஆனாலந்தக்கரண வாதனை யொழிக்குநெறி எங்ஙனமென்ற சீடனை நோக்கிக்கூறுகிறார். 36-வது) யோகசாதனையால் அந்தக்கரணங்களுக்கு வாதனை யொழியும் ஆனால் அவ்வியோகத்தின் இலக்கணம் யாதென்னின் அந்தயோகமும் கிரியை ஞானமென்னும் இரண்டு பேதத்தால், கிரியாயோக மென்றும், ஞானயோகமென்றும் இரண்டு பிரகாரமாயிருக்கும், அந்தக்கிரியா யோகஞான யோக விலக்கணங்களியாவையெனின், கிரியாயோகம் இயம முதலிய எண்வகையாயிருக்கும், ஞானயோகம், ஏகமாயுள்ள மெய்ப்பொருளை, வேதாகமங்களை யாராய்ந்து நிச்சயம்பண்ணிக்கொண்டு பின்னர் ஞானநிட்டைகூடி அது வென்றும் இது வென்றும் சுட்டியறியும் சுட்டறிவெல்லாம் இறந்து கரணம்(அசைவறநிற்றல்) ஆனாலிவ்வியோகத்தை யடையுமாறு எங்ஙன மென்னின் அந்தவிருவகையோகத்தினையடைதற்கும் ஐம்புலன்களும் இறந்து போகவேண்டும். ஆனால் இவ்வைம் புலன்களும் இறந்துபோம்படி செய்தற்கு உபாயம் எங்ஙன மென்னின் ஐந்தவாவினையும் ஒழித்ததினால் அப்புலன்களைந்தும் இறந்துபோம். 37-வது (அந்த அவாவினையறுக்குமாறு எங்ஙனமென்ற சீடனை நோக்கிக்கூறுகின்றார்) வீடடையக் கருதினேன் ஐம்புலன்களையும் அடல்வேண்டுமென்றும் அவ்

வைந்தினையும் அடுதற்கு அவற்ருல் அனுபவிக்க விரும்பி வைத்தபொருள்கள் அனைத்தினையும்ஒருங்கேவிடல் வேண்டு மென்றும் தேவர்களும் தோத்திரம் பண்ணுநின்ற ஒப்பற்ற தமிழ்வேதமாகிய திருவள்ளுவப்பயன்கூறுதலின்,உயிர்ச்சார்பு பொருட்சார்பு என்றிருவகையாயுள்ள நமது புறச்சார்பினை முன்னர் வெறுத்துத்துறந்தபின்பு அதன்கண்வைத்த அவா வினையறுத்துப் பின்பு பஞ்சேந்திரியங்களையும், விடயங்களை க்காணுந்தோறும் எழுந்து செல்லவொட்டாது உள்ளடக்கி இந்த முறையே ஒவ்வொன்ருக நீத்துச்சென்று யாவராலும் அறிதற்கரிய அந்தச்செவ்விய மெய்ப்பொருளையறிவது ஞான மெனவும் ஞானத்தால் அஞ்ஞானத்தைக்கெடுப்பது வீடெனவும் விளங்காநிற்குமாதலின் ஞானமும்வீடும் இவைகளென்று அறிவாயாக, (எ-ம்.) முன்பிருவகைச்சார்பாகிய புறப்பற்றினை யொழித்து அதற்குமேல் அதன்கண்வைத்த அவாவினையறுத்து, அதற்குமேற்காணப்பட்ட விடயங்களில் எழாமல் இந்திரியநிக்கிரகம்பண்ணி அதற்குமேல் முன்னர் ஏறியிருந்த சரணவாதனையை யொழித்து அதற்குமேல் நனவிற்சுழுத்தியைப்பெற்று அதற்குமேல் அஞ்ஞான நிவிர்த்திபண்ணி அதற்குமேல் சிவதரிசனம்பண்ணி அதற்குமேல் பரை தரிசனம் பண்ணிஅதற்குமேல் சிவதரிசனம் பண்ணிஅதற்குமேல்ஐக்கியங்கூடவேண்டுதலின்,ஒழுங்கிஞடருமச்செம்பொருள்காண்பதறிவென்ருர். (எ-ம்) வருவனவற்ருலும்அன்றியும், அவிரோ

தவுந்தியார், உணர்ந்தோரனைத்துமாமோர்பொருடன்னையுணர்ந் தோரனைத்துமென்றுந்தீபற, எ-ம்,—பிரமகீதை, எப்பொரு ள்களுக்குந்தோற்றநிலையுமிறுதியுமிதன்கணேயாகி,யொப்பி டவொன்றுமின்றியேயென்றுமுள்ளதாயுரையுணர்விறந்தவப் பொருணோரேயறிந்தபோதெல்லாப்பொருள்களுமறிந்தவாமந் தமெய்ப் பொருடானேயெப்பொருள்களுமாய்விளங்கலால்வே றிலாமையினல்எ-ம்,மற்றும் வருவனவற்றாற் காண்க. இவற் றிற்கியைய ஞானவிலக்கணம் நன்குணர்ந்துலகுய்யத்தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனர் அருளிச்செய்த தமிழ் வேத மாகிய திருக்குறளுணா. ஞானமாவது, வீடுபெயக்கு முணர்வு' அது நிலையாமை முதல் அவாவறுத்தலிறுதியாக நான்கதிகா ரத்துள் அடக்கப்பட்டதென்றும், அவற்றுள் நிலையாமையாவது தோற்றமுடையன யாவும் நிலையுதவிலவாந் தன்மையென் றும், மயங்கியவழி பேய்த்தேரிற் புனல்போலத் தோன்றி மெய்யுணர்ந்த வழி கயிற்றிலரவுபோலக் கெடுதலிற் பொய் யென்பாரும், நிலை வேறுபட்டு வருதலாற் கணந்தோறும் பிறந்திறக்கு மென்பாரும், ஒருவாற்றான் வேறுபடுதலும், ஒருவாற்றான் வேறுபடாமையும், உடைமையின் நிலையுதலும். நிலையாமையும், ஒருங்கேயுடையவென்பாரும், எனப்பொருட் பெற்றி கூறுவார் பலதிறத்தராவர், எல்லார்க்கு மவற்றது நிலையாமையுடம்பாடாகலின், ஈண்டதனையே கூறுகின்றார். என்றும், இதுணர்ந்துழியல்லது பொருள்களிற் பற்றுவிடா

தாகலின், இது முன் வைக்கப்பட்டதென்றும், துறவாவது புறமாகிய செல்வத்தின்கண்ணும், அகமாகிய யாக்கையின்கண்ணும் உளதாம்பற்றினை, அவற்றது நிலையாமை நோக்கிவிடுதல் அதிகாரமுறைமையு மிதனானே விளங்கும்,—என்றும்,

மெய்யுணர்தலாவது பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும், விபரீதஐயங்களானன்றி உண்மையானுணர்தல். இதனை வடநூலார் தத்துவ ஞானமென்பர். இதுவும் பற்றற்றான்பற்றினைப்பற்றிய வழி உளதாவதாகலின் அக்காரணவொற்றுமைபற்றித் துறவின்பின் வைக்கப்பட்டதென்றும், அவாவறுத்தலாவது முன்னும் பின்னும் வினைத்தொடர் பறுத்தார்க்கு நடுநின்ற உடம்பும், அதுகொண்ட வினைப்பயன்களும் நின்றமையின் வேதனைபற்றி ஒரோவழித்துறக்கப்பட்ட புலன்கண்மேற் பழைய பயிற்சிவயத்தான் நினைவுசெல்லுமன்றே அந்நினைவும், அவிச்சையெனப்பிறவிக்கு வித்தாம். ஆகலின் அதனை யிடைவிடாத மெய்ப்பொருளுணர்வானறுத்தல் அதிகாரமுறைமையு மிதனானே விளங்கு மென்றும், திருக்குறளுக்குரைசெய்த ஆசிரியர் பலருரைகளுட் சிறந்ததென்றறிஞர்கள் கூறுஞ்சீர்சால், உரையாசிரியர் பரிமேலழகர் மேற்குறித்த அவ்வவ்வதிகார முகத்திற் செப்பியிருக்கின்றமையால், அம்முறையே மனோநாசம், தத்துவஞானம், வாசனாக்ஷய மூன்றும், ஊகித்தறிக. என்னை, உண்மை ஞானமடைவதற்குரிய விவேக முதலிய சாதனங்களுண் முதற்

சாதனமாகிய நித்தியா நித்திய விவேகமுடையார்க்கே, இக பரபோகவைராக்கியமாகிய இரண்டாம் சாதன முதலியவைக ளுளதாம். இச்சாதனங்களுடையவர்களே தூயமனமுடை யாராகலின் அவர்களுக்கே இறைவனருளான், விசாரவாயிலாக மெய்யுணர்வுதிக்கும் ஆதலாற்றுறவின்பின் மெய்யுணர்தலும் இடைவிடாத அம்மெய்யுணர்வாற் பண்டைப்பயிற்சிவயத்தா லுளதாம் வாதனையும் நீக்குவராகலின் மெய்யுணர்தலின் பின், அவாவறுத்தலென்னும், அதிகாரமும், முறையே வைத்தன ரென்றுய்த்துணர்க. அன்றியும் சுத்தவாசனை அசுத்தவாசனை தெய்வசம்பத்து, அசுரசம்பத்து, சற்சங்கம், துற்சங்கம், முத லியவைகளை அவ்வவ்வியல்களை விளக்குந் திருக்குறள்களின் உரைகளாற் காண்க. இனிஉண்மைத்துறவுடையார்க்கே மெய் யுணர்வுதிக்குமென்பதற்கு மேற்கோள், திருக்கடைக்காப்பு, தந்தை தாய் தன்னுடன்றோன்றினுர் புத்திரர் தாரமென்னும் பந்த நீங்காதவர்க்குய்ந்து, போக்கில்லெனப்பற்றினுயே, எ-ம், திருப்பாட்டு,—பழியுஞ்சுற்றமும் பெற்ற மக்களும், பண்டை யார் நல்லபெண்டிரு, நிதியுமிம்மனைவாழும், வாழ்க்கை நினைப் பொழி மடநெஞ்சமே எ-ம், வைராக்கியதீபம், மெய்யுணர்வை யுந் துறவூடோதினுர்வேதந்தனைத்தமிழுருவத்தொளித்தெமக் களித்த வள்ளுவரே எ-ம். அவிரோதவுந்தியார், குடும்பபாரம் தலைக்கொண்டவர்க்கல்லல், விடும்பரிசின்மையாலுந் தீபற மெய்யுணர் வெங்ஙனுமுந்தீபற எ-ம், மற்றும் வருவனவற்றுற்

காண்க. பாசக்குழாத்தோடெங்கூடி ஆசைக்கடலின் மூழ்கிக் கிடப்பவர் ஈசர்க்கினியரடையும் மாசற்ற மெய்யுணர்வுறா ரென்பதை மேற்கண்ட அவிரோதவுந்தியாருரையாற்றெளிக. ஐயுணர்வெய்தியக்கண்ணும் பயமின்றேமெய்யுணர்வில்லாதவர்க்கு என்று திருவள்ளுவநாயனார் அருளிச்செய்த திருக்குறளுரையின்படி செல்லப்படுகின்ற புலன்கள் வேறுபாட்டான் ஐந்தாகிய உணர்வு,அவற்றை விட்டுத்தம் வயத்தாயவழியும், அதனாற் பயனில்லையேயாம், மெய்யினை யுணர்தலில்லாதார்க்கு என்று துணியப்படுதலால், வீடடைதற்கின்றியமையாவேது மெய்யுணர்வேயெனப் பெறப்பட்டது. அற்றேல் அம்மெய்யுணர்வினிலக்கணம் யாதெனின் (எப்பொருளெத்தன்மைத்தாயினும்அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு, என்னுங் குறளுரையாற் றெளிக, இத்திருக்குறளின் பொருளாவது) யாதொருபொருள் யாதோரியல்பிற்றாய்த்தோன்றினும் அத்தோன்றிய வாற்றைக்கண்டொழியாது அப்பொருளின்கணின்று மெய்யாகிய பொருளைக்காண்பதே மெய்யுணர்வாவது (எ-று.) பொருடோறும் உலகத்தார் கற்பித்துக்கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக்கழித்துநின்ற வுண்மையைக் காண்பதென்றவாறாயிற்று. அஃதாவது கோட் சேரமான் யானைக்கட்சே எய் மாந்த ரஞ்சேரலிரும்பொறை என்றவழி அரசனென்பதோர் சாதியும், சேரமான் என்பதொருகுடியும் வேழநோக்கினை யுடையானென்பதோர் வடிவும் சேஎயென்

தோரியற் பெயரும், மாந்தரம் சேரலிரும்பொறை யென்ப தோர் சிறப்புப் பெயரும், ஒரு பொருளின்கட் கற்பனையாக லின் அவ்வாறுணராது நிலமுதல்உயிரீருகிய தத்துவங்களின் தொகுதியெனவுணர்ந்து அவற்றை நிலமுதலாகத்தத் தங் காரணங்களுளொடுக்கிக்கொண்டு சென்ருற்காரண காரியங் களிரண்டுமின்றி முடிவாய் நிற்பதனையுணர்தலாம். எப்பொ ருளென்ற பொதுமையான் இயங்கு திணையும் நிலைத்திணை யுமாகிய பொருள்களெல்லாமிவ்வாறே யுணரப்படும். ஆத ஞன் மெய்யுணர்வின திலக்கணங் கூறப்பட்டது. எ-ம். இரு ணீங்கியின்பம் பயக்கும் என்ற திருக்குறளுரையில், வீடாவது நிரதிசயவின்ப மென்பதூஉம். அதற்கு நிமித்த காரணம் கேவலப் பொருளென்பதூஉம்கூறப்பட்டனஎன்றும்உரையா சிரியர் கூறியிருக்கின்றனர். கற்றீண்டு மெய்ப்பொருளைக் கண்டார் தலைப்படுவர் மற்றீண்டு வாராநெறி என்னுங் குறளு ரையில் இம்மக்கட் பிறப்பின்கண்ணே உபதேச மொழிகளை அநுபவமுடைய தேசிகர் பாற்கேட்டு அதனன் மெய்ப்பொரு ளையுணர்ந்தவர் மீண்டும் இப்பிறப்பின் கண்வாராத நெறியை யெய்துவர். என்றும் கற்றென்றதனல் பலர் பக்கலினும் பல காலும் பயிறலும், ஈண்டென்றதனல் வீடு பேற்றிற் குரிய மக்கட்பிறப்பினது பெறுதற்கருமையும் பெற்ரும். என்றும் வீட்டிற்கு நிமித்த காரணமாய முதற் பொருளையுணர்தற்கு உபாயம் மூன்று, அவை கேள்வி, விமரிசம், பாவனை யென்

பனவென்றும், அவற்றுட் கேள்வி இதனாற் கூறப்பட்ட தென்றுங் கூறியிருக்கின்றனர். ஓர்த்துள்ள முள்ளதுணரின் என்னுங்குறளுரையில்-இதனால் விமரிசங் கூறப்பட்டதென்றும்கூறியிருக்கின்றார். பிறப்பென்னும் பேதைமை நீங்கச்சிறப் பென்னும் செம்பொருள் காண்பதறிவென்னுந் திருக்குறளுரையில் விகாரமின்றி யெஞ்ஞான்றும் ஒருதன்மைத்தாதல் பற்றியதனைச் செம்பொருளெனவும் மெய்ப்பொருளெனவும் உள்ளதெனவும் கூறியதாம். என்றும் அதனைக்காண்கையாவது உயிர் தன்ன விச்சைகெட்டு அதனோடு ஒற்றுமையுற இடைவிடாது பாவித்தல். என்றும் இதனைச்சமாதியெனவும் இதனாற் பாவனை கூறப்பட்டதென்றும் கூறியிருக்கின்றனர். கேள்வி யெனினும் சிரவண மெனினுமொக்கும். விமரிசமெனினும் சிந்தித்தலெனினும், மனனமெனினுமொக்கும், பாவனையெனினும், தெளிதலெனினும் நிதித்தியாசனமெனினுமொக்கும். காமம் வெகுளி மயக்க மென்னுந்திருக்குறளுரையில், மெய்யுணர்ந்தார்க்கு நிற்பன எடுத்தவுடம்பும் அதுகொண்ட வினைப்பயன்களுமே யென்பது பெற்றாம். என்று கூறியிருக்கின்றனர். இவ்வுண்மைப் பொருள்களினுட்பங்களைப் பெரியாரை வழிபட்டாராய்ந்துணர்க. மேற்கூறியவற்றான் முறையே சாதனங்களை யுற்று நல்லாசிரியரை வழிபட்டுச் சுருதி விசாரணை செய்து இறைவன் றிருவருளான் மெய்யுணர்தல் வேண்டும். இஃதன்றி வித்தியா சாமர்த்திய

முதலிய எவ்வகையாற்றலுடையரேனுந் தம்முடைய புத்தி வலியான் மெய்ப்பொருளுணர்தலரிது, அரிது, அரிது,என்னை வேதத்தினுண்மையையுள்ளபடியறியவிரும்பும் அதிகாரியான வன், உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம். பிரச்சுரம், முத லாகிய ஸ்வரஞாயங்களும் அந்த ஸ்வரத்தைப்பற்றி வந்த மாத்திரை விசர்க்கம் ஸ்தாயி, கலா இவை முதலாகிய, ஙியா யங்களும், மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம், இந்த ஆறு அங்கஞானமும், புராணம் பதினெட்டும். அதினுபபுராணம் பதினெட்டும் மநுக்களால் விஸ்தரிக்கப்பட்ட ஸ்மிருதிபதினெட்டும், சிவரகசியம் பாரத முதலாகிய இதிகாசங்கள், ஈசனுலருளப்பட்ட இருபத்தெட் டாகமம் முதலாகிய ஆகமங்களும், குரு சம்பிரதாயமாய்க் கிரகித்தவனும் இருக்கவேண்டும் என்றும் அன்றி வேதப் பொருளானது பதத்தைப்பற்றி வந்த பொருளொன்று, வாக் கியத்தைப்பற்றி வந்த பொருளொன்று, அக்ஷரத்தைப் பற்றி வந்த பொருளொன்று, வேதமந்திர ரூபமாதலான் மந்திரத் தைப்பற்றிவந்த பொருளொன்று, வேதம் யாகசாதகமாயிருப் பதால் பிரயோகத்தைப்பற்றி வந்த பொருளொன்று, வேதம் சுரரூபமானதால், சுரத்தைப்பற்றி வந்த பொருளொன்று, என்றும். இவைகளையெல்லா முறையா யுணரவேண்டுமென் றும் ஈசனதுகருணைக்குப் பாத்திரனுயிருக்க வேண்டுமென் றும், இம்முறையே பொருள்களை அறிய வல்லமையுடையவ

னுக்குத்தான் வேதங்களின் சுபாவம் வெளியாகும் என்றும் ஆன்ஞோருரைத்தவண்ணமே வித்தியாரண்ணிய சுவாமிகளும் தாமருளிச்செய்த வேதாந்த கிரந்தங்களில் ஆங்காங்கு ஈசன் றிருவருட்பிரசாதமில்லாதவர்கள், ஞானத்தையடையமாட்டா ர்களென்று கூறியிருக்கின்றனர், ஆகவே, இறைவன்றிருவரு ளின்றி எத்தகையரேனுமெய்யுணர்தலரிதரிதெனக் கூறினும் (இதற்குப்பிரமாணம்) திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள். திருக்கடைக்காப்பு) அரியகாட்சியராவர்தமதங்கை, எரியுமேறு கந்தேறுவர்கண்டமும், கரியர்காடுறை வாழ்க்கையராயினும், பெரியாரறிவாரவர்பெற்றியே, எ-ம், திருநாவுக்கரசுசுவாமிகள், தேவாரம், உயிராவணமிருந்து, என்றபாசுரத்தில், அருட்கண் ணுனோக்காதாரல்லாதாரே, எ-ம், ஆட்டுவித்தாலாரொருவரென் ற பாசுரத்தில், காண்பாரார்கண்ணுதலாய்காட்டாக்காலே, எ-ம். திருவாசகம், நூலுணர்வுணரா நுண்ணியோன்காண்க, சித்தமுஞ் செல்லாச்சேட்சியன்காண்க, எ-ம், இன்றெனக்கருளி என்ற பாசுரத்தில், ஒன்று நீயல்லையன்றியொன்றில்லை யாருன்னை றியயகிற்பாரே, என்றும், மற்றும்வருவனவற்ருற்காண்க. பட் டினத்தடிகள், தெய்வத்திருவருள்கைவந்து கிடைத்தலின் மா யைப்படலங்கீறித்தூயஞானநாட்டம் பெற்றனன், எ-ம், (திரு விளையாடற்புராணம்) வேதமுதற்கலைகாட்சிமுதலளவைவிரிஞ் சன்முதல்விண்ணோர்செய்யுஞ், சோதனையுளகப்படாச் சோதியு னைச் சோதிக்கத்துணிந்தேனந்தோ, எ-ம், பூதங்களல்ல பொறி

யல்லவேறுபுலனல்ல வுள்ளமதியின், பேதங்களல்ல இவை யன்றி நின்ற பிறிதல்லவென்று பெருநூல், வேதங்கிடந்து தடுமாறும்வஞ்சவெளியென்ப, எ-ம், மறைபலமுகங்கொண்ட லறிவாயிளைத்து மயஙகவேறகண்ட பூரணமா நிறைபரம் எ-ம். குமரகுருசுவாமிகள்; சிதம்பரமும்மணிக்கோவை மின் வீழ்ந்தன்ன என்ற பாட்டில், திங்களங்கண்ணித் தில்லைவாண அன்பருக்கெளிமையாகலினைய நின்பெருந்தன்மை நீயே யிர ங்கி யுண்ணின்று ணர்த்தி னுணரினல்லதை நுண்ணூ லெ ண்ணி நுணங்கநாடிப் பழுதின்றெண்ணிப் பகர்துமியாமெ னின் முழுதுமியாரே முதுக்குறைந்தோரே நால்வகைப்பொ ருளுநவையறக்கிளந்த வேதபுருடனுமியாது நின்னிலையென த்தேறலன் பலவாக் கூறினனென்ப அதாஅன்று முன்னை நான்மறையும் முறைப்பட நிறீஇ, மனனிருஞ் சிறப்பின்வாத ராயணனும் கையிழந்தனனது பொய் மொழிந்தன்றே அத னல் தெளிவில் கேள்வியிற் சின்னூலோதியளவாநின்னிலைய ளத்தும் போலும் அறிவுமாயுளுங் குறையக்குறையாத பையு ளேயெண்ணில்படைத்துப் பொய்யுடல் சுமக்கும் புன்மை யோமே என்றும் திருவாய்மொழி, உணர்ந்துணர்ந்துணரினு மிறைநிலையுணர்வரிது எ-ம். மற்றும் வருவனவற்றாற் காண்க. (சமாதியியல்பு)வியுத்தான சமஸ்காரத்தினொழிவும், நிரோத சமஸ்காரத்தின் பிரகடத்தன்மையுமாகிய அந்தக்கரணத்தின் ஏக்காகிரத் தன்மைருபமான பரிணாமஞ்சமாதி யெனப்படும்.

அச்சமாதியும்சவிகர்பசமாதி நிருவிகற்பசமாதியெனஇரு வகைத்தாம், ஞாதா, ஞான, ஞேயரூபத்திரிபுடித் தோற்றத் தோடுகூட அத்விதியப்பிரமத்தின்கண், அந்தக்கரண விருத்தியின் ஸ்திதி, சவிகற்பசமாதியெனப்படும். அதுவும் சத்தாநுவித்தம், சத்தாநநுவித்தம் எனவிருவகைத்தாம், அவற்றுள், சிவோகமென்னும் சத்தத்தோடு கூடியிருப்பதை சத்தாநுவித்தமெனவும். சத்தரகிதத்தைச் சத்தாநநுவித்தமெனவும் கூறுவர், திரிபுடித்தோற்றமின்றி அகண்டபிரமாகாரமான அந்தக்கரண விருத்தியின் ஸ்திதியை நிருவிகற்ப சமாதியென்பர், இவ்வாறு சவிகற்ப சமாதி நிருவிகற்பசமாதிகட்குப் பேதமுண்டு. அவைகளில் சவிகற்ப சமாதி சாதனம். நிருவிகற்ப சமாதி பலமாம். நிருவிகற்பசமாதியும் அத்துவைத்பாவனா ரூபமென்றும் அத்வைதாவஸ்தான ரூபமென்றும் இருவகைத்தாம் அத்துவைதப் பிரமாகாரமான அந்தக்கரணத்தின் அஞ்ஞாத விருத்தியோடு கூடில் அத்துவைதபாவனாரூப நிருவிகற்ப சமாதி யெனப்படும். அச்சமாதியின் அப்பியாச மிகுதியால் பிரமாகார விருத்தியும் சாந்தமாய்விடில், விருத்திரகித அச்சமாதி அத்துவைதாவஸ்த்தாந ரூபநிருவிகற்ப சமாதி ~~அதற்குச் சாதனமாம்~~ என்ப, அத்துவைதாவஸ்தானரூப நிருவிகற்ப சமாதியே சாத்திய நிருவிகற்ப சமாதியெனப்படும் ஞானத்துக்கு விவேகம் வைராக்கியம் சமாதி சட்சம் பத்து முமுட்சுத்துவம் இவை நான்கும் சிரவண

மனன நிதித்தியாசனங்கள் மூன்றும் தற்பதார்த்த தொம்ப தார்த்த சோதனை ஒன்றும் ஆகஎட்டும் அந்தரங்க சாதனமெ ன்று சொல்லப்படும். அவைகளில் முமூட்சுக்கு பகிரங்க சாத னங்கள் தள்ளற்பாலன அந்தரங்கசாதனங்கள்கொள்ளற்பால ன. விசாரத்தினுல்பார்க்கில் ஞானத்திற்கு முக்கியஅந்தரங்க சாதனம் தத்துவமசியாதி மஹாவாக்கியங்களாம். சிரவணுதி களுமல்ல என்னை யுத்தியினுல் வேதாந்த வாகியங்களின் தாற்பரிய நிச்சயம் சிரவணமெனப்படும் ஜீவப்பிரமங்களின் அபேதத்தின் சாதகமும் பேதத்தின் பாதகமுமாகிய யுத்தி களால் அத்துவிதீயப் பிரமத்தின் சிந்தனம்-மனன மென்று சொல்லப்படும். நிதித்தியாசனத்தின் பரிபாகாவஸ்தையே சமாதி யென்பர் இதனுல் சமாதியும் நிதித்தியாசனத்தில் அந்தர்ப்பாவமாம் வேறு சாதனமல்ல

அனுன்மாகார விருத்தியின் வியவதானரகிதமானபிமமா கார விருத்தியின் ஸ்திதி நிதித்தியாசனமென்று சொல்லப் படும். இந்தச்சிரவணமனன நிதித்தியாசனங்கள் ஞானத்திற் குச் சாட்சாத் சாதனமல்ல பின்னெப்படிப்பட்டதெனின் புத்தியினது தோஷமாகிய அசம்பாவனை, விவரீதபாவனைக ளின் நாசகமாம். இப்படி விசாரசாகரத்தில் பேசப்படுகிறது" யாது பிரத்தியட்சப்பயனையுடையது அது அந்தரங்க சாதன மெனப்படும். அதற்கேதுவாகஇருக்கிறது பகிரங்கசாதன மெனப்படும். பகிரங்கம் தூரமாயுள்ளது அந்தரங்கம், சமீபமா

யுள்ளது இவைமுறையே பரம்பராசாதனமென்றும் சாக்ஷாத் சாதனமென்றும் கூறுவார். இனி, வாசனைகளின் பாகுபாடு மலின வாசனையென்றும், சுத்தவாசனை யென்று மிருவகையாம், அவற்றுள், மலினவாசனையானது தூலதேகாதி பஞ்சகோசங்களுக்கும் அவைகட்குச் சாக்ஷியான ஆத்மாவுக்குமுள்ள பேதத்தை மறைக்கா நின்ற அஞ்ஞானத்தினாலுளதாகும் பிராந்திபரம் பரையாய்க் கனமாயிருக்கிற ஆகாரத்தையுடைத்தானதாயு மீண்டு மீண்டு பிறப்பைக் கொடுக்கிறதாயும் கனவாங்காரத்தோடு கூடினதாயு மிருக்கிற வாசனையெதுவோ அது மலின வாசனை யெனப்படும், இம்மலின வாசனை, லோகவாசனை; சாஸ்திரவாசனை, தேகவாசனை, அசுர வாசனை யெனநான்குவகைத்தாம். மலினவாசனையினால் வரப்பட்ட கனவகங்காரமாவதியாதெனில், இந்தத்தனமென்னாலடையப்பட்டது, இதையடையப்போகிறேன். இஃதிருக்கிறது, இனிமேலெனக் கிஃதுண்டாகப் போகிறது, இந்தச்சத்துருவென்னாற் செயிக்கப்பட்டான். பின்னுஞ் சில சத்துருக்களை நானே செயிக்கப்போகிறேன். நானெல்லோருக்குஞ் சமானன், நான் போகி, நான் சித்தன், நான் பலவான், நான் சுகி, நான் பாக்கியவான், நான் சனக்கட்டுள்ளவன், எனக்குச் சமானம் யாவர், நான் யாகம் பண்ணப்போகிறேன், நான் தானம் பண்ணப்போகிறேன் என்றிவை முதலான அவிவேக முதலான அகங்காரத்தினான் மூடப்பட்டவர்களாயும் அனேக சித்

தப்பிரமையுடைத்தான பேர்களாயும், விஷயபோகங்களிலா சக்தி யுடையவர்களாயும் இருக்கிற மாந்தர்கள் மஹா கோர மாகிய ரௌரவாதி நரகத்தில் விழுவார்களென்றும்; ஈசுவர னிடத்தும், ஈசுவர பக்தாளிடத்தும், துவேஷியர்களாயும், அசுத்தமுடையவர்களாயும் மலினவாசனைகளோடு கூடினவர்க ளாயுமிருக்கிற துட்டர்களை அசுரயோனிகளில் நாமே தள்ளி விடுவோம் என்று—பகவற்கீதை, 16-வது அத்தியாயம், 13, 14, 15, முதலிய சுலோகங்களிற் பகவான் கூறியிருக்கின்றார்

பிரமகீதையிலும், பாவவாதனைகள், பரமாத்துவித ஞா னத்தை விலக்குறும் விரோதியாமென்று பகர்ந்திருக்கின்றது. உ-ம், சதுர்மறை யொழிந்தவாதனை பொல்லாத்தர்க்க வாதனை யுலகத்து மதமுறவொழுகும் வாதனை தாரமக்கள் சுற்றத்தின் வாதனையும் இதமுறு பொருளில் வாதனை தேகேந்திய மனம் புந்தி நற் பிராணன், முதல வாதனையும் வித்தை வாதனையு முடிவில் போகத்தின் வாதனையும், ஏறுடையானைத் திருநெடு மாலை யிக்ழும் வாதனையும் வேதத்துட் கூறிடும் ஞானசாதன மாகக்கொள்ளு முத்தூளபுண்டரத்தை, மாறுடனிகழும் வாத னை பாவவாதனையாவும் மானுடற்கு—வேறும்பரமாத்துவித ஞானத்தை விலக்குறும் விரோதிவிண்ணவரே. என்றும் மற்றும் வருவன வற்றுற் காண்க.

லோக வாசனை முதலிய மலினவாசனைகளினியல்புகளை விரிவாய்ச் சீவன் முத்திப்பிரகரண முதலியநூல்களிற் கூறப்

பட்டிருக்கின்றன, அவைகளையறிய விரும்புவோர் ஆண்டு ணர்க.) துன்பங்களுக்கெல்லாங் காரணமாயும், பிறவிக்கேது வாயுமிருக்கிற மலின வாசனையென்னும் அசுத்த வாசனையை, எவ்வித வுபாயத்தினாலாவது பண்டைப் பயிற்சி பற்றி யெழ வொட்டாமலடக்குவதே விவேகிகளுடைய கடமையேயாம்.

(இதற்குதாரணம்)-தாயுமானசுவாமிகள், வாதனைப்பழக் கத்தினுன் மலமந்தமனத்தால்,—ஓதவந்திடுமுரையுரைப்படி தொழிலுளவாம், எ-ம், ஐயவாதனைப் பழக்கமே மனநினைவது தான்,—வையமீதினிற் பரம்பரை யெங்கணு மருவும்,—மெய் யினின்றொளிர் பெரியவர்சார்புற்று விளங்கிப், பொய்யதென் பந்த யொருவி மெய்யுணர்வதுபோதம் (என்றும்) கூறியிருக் கின்றார். அன்றி, வாசிட்டம், மறுகுவாதனைகடீர்ந்த மௌ னத்தை யன்றி வேறோர், உறுகதி நல்லதில்லை, என்ற செய் யுண் முதலியவற்றானும் காண்க.

மலின வாசனையைக்கெடுக்கும் உபாயமாவதியாதெனின், வாசனக்ஷயத்துக்குப் பிரதிகூல வாசனையின் பழக்கமே சாதனமென்று, வாசிட்டத்திற் கூறியிருக்கிறபடியால், அசுத் தவாசனையைக் கெடுப்பதற்கு சுத்த வாசனையின் பழக்கமே யாம், என்றுணர்க. அற்றேல், இனிச் சுத்த வாசனையாவ தியாதெனில், பிரம தத்துவத்தைத் திடமாயறிந்த புருட னிடத்திலிருக்கப்பட்டதாயும், வறுத்த விதை குதிர் நிரம்பு கிறதற்கு மாத்திரமேயன்றி முளைத்தற்கேதுவாகாத தன்மை

போலத் தேகம் சீவித்திருக்கும்பொருட்டு மாத்திரம் உப யோகப்படுகிறதாயும், டம்பம் கர்வம் ஆங்கார முதலிய அசுர சம்பத்தையுண்டுபண்ணுததாயும் பிறப்பிற்கேதுவல்லாததாயு மிருக்கிறதேயாம். (உ-ம்) வாசிட்டம்,—வறுத்த விதை யொப்பாகி யின்பமன்றி மறுசனன மற்றவாதனை யோர்த்துள் ளோ, ரொறுத்த விடர்தீர் சீவன் முத்தராகு—முண்மையுரு வடைந்த மனமுடையோரன்ஞர்,—நிறுத்துணர் ஞானககரை யுற்றவருமன்ஞர் நெஞ்சமிலாதவரன்ஞர், நிமலமாகப்,—பொ றுத்த வுடனீங்கி லாகாச ரூபம் பொருந்தினரன்ஞரென்று புகல்வரன்றே—எ-ம், மற்றும் வருவனவற்ருற் காண்க.

தெய்வசம்பத்தால் மோக்ஷமென்றும், அசுர சம்பத்தாற் பந்தமென்றும், அவ்விருவித சம்பத்தினியல்புகளையும், கீதை யிற் பதினறுமத்தியாயத்திற் பகவானருளிச் செய்திருக்கிருர். (அவைகளின் விபரம்) தெய்வசம்பத்தாவது, பயமில்லாமை, சித்த சுத்தி, ஞானசாதனமான தியானநிட்டை, தானம், இந்திரிய நிக்கிரகம், நிஷ்காமமா யனுட்டிக்கிற யாகம், தன் தன் வேதாத்தியயன கிருச்சிராதி தபசு, உள்ளும் வெளியு மொத்திருக்கிற நட்பு, இம்சையின்மை, பொய்யின்மை, கோப மின்மை, ஆசையின்மை, சந்நியாசம், சாந்தி, கோட்சொல் லாமை, பிராணிகளிடத்துத்தயை, குளிர்ந்த வார்த்தை, எவ் வளவுதான் தருமஞ் செய்யினும் அகங்காரமன்றி நாம் செய்த தெவ்வளவென்னும் வெட்கம், சுகம் வந்தாலும் துக்கம் வந்தா

லும், சாஸ்திர ஜன்னிய விவேகத்தாற் சித்தமசையாதிருப்பது, நல்ல சரீர காந்தி, குரோதம் வந்தாலுமதையடக்குவது, சாஸ்திரீய காரியத்திற் றைரியம், மண் சல முதலானதாற் பாகிய சௌசம், விவேகத்தினால் ராகத்துவேஷாதிகள் நிவாரணமாகிய ஆந்தரசௌசம், ஒருவரைக்குறித்தும் துரோகமின்மை, நமக்குச் சமானம் யாரென்கிற அகங்காரமின்மை, இவை முதலிய நற்குணங்களேயாம். இனி, அசுர சம்பத்தாவது, ஒருவனுடைய திரவிய முதலியவைகளை யபகரித்தற்பொருட்டுக் கருமி போலவும், உபாசகன்போலவும், ஞானிபோலவும், அபிநயம் பண்ணுவதாகிய டம்பம், அடங்காதவகங்காரம், கர்வம், காமக்குரோதம், லோபம், அவிவேகம், நித்திரை, ஆலசியம், பயம், மைதுனம், இவை முதலிய துர்க்குணங்களேயாம். இவ்விருவித சம்பத்தினுட் சாஸ்திரத்திற் சாற்றியவாறு முயற்சியினாற் சம்பாதிக்கப்பட்ட தெய்வசம்பத்தாகிய சத்துவாசனையால் அசுர சம்பத்தாகிய துர்வாசனையை நாசஞ்செய்தாற் சீவன் முத்திச் சுகங் கிடைக்குமென்றும், சத்தாதி விஷயங்களை யிச்சிக்கிற காலத்தில் உண்டாகிற சமஸ்காரம், மானச வாசனையென்றும், அந்த விஷயங்களைப் புசிக்கிற காலத்திலுண்டாகிற சமஸ்காரம் விஷய வாசனையென்று, சொல்லப்படும், என்றும், லோகவாசனை, சாஸ்திர வாசனை, தேகவாசனை அசுரவாசனையாகிய நான்கும், இந்த மானச வாசனை, விஷயவாசனையைத் தவிர வேறன்று என்

றும், இவை யிரண்டுமே முன்னம் விடவேண்டுமென்றும் பெரியார் விளம்பியிருக்கிறார்கள்.

(இனி மனத்தின் பாகுபாடு) மாந்தர்க்கு மனதே பந்தத்துக்கும், மோக்ஷத்திற்கும் காரணம். வனிதாதி விடயபோகேச்சையோடும் கூடிய மனது, பந்தத்துக்கு காரணமாம் விடய போகங்களில் நிராசையுள்ள மனம், மோக்ஷத்திற்கேதுவாம். ஆனமையான் முத்தி விருப்பமுள்ள விவேகியானவன் விஷயவாசையானது நீங்கும்படியான நானாவித முயற்சிகளைச் செவ்வையாய் இயற்றவேண்டும். வைராக்கிய முதலியவற்றோடு கூடின தியானுப்பியாச பலத்தாலொடுங்கிய மனமானதொரு பற்று மின்றிப், பரமானந்த ரூபமாயிருக்கிற, ஆத்மாவினிடத்திற் பாலிற்கலந்த சலம்போல், ஏகரசமாக ஐக்கியத்தை யெப்பொழுதடைகிறதோ அப்பொழுதந்த மனது, நசித்த மனதென்று நவிலப்படும். இந்நிலை வருமளவும் வைராக்கிய தியானுப்பியாசங்களைக் கைவிடக்கூடாது. ஆத்மாவினிடத்தில் மனம்லயிக்கிறதே தியானபலமான ஞானம். அதுவே மோக்ஷம் என்று சுருதிகள் செப்புகின்றன. அவ்வாறே பெரியாரும் புகன்றிருக்கிறார்கள். (உ-ம்) பிரபுலிங்கலீலை,—விரிந்தநெஞ்சங்கருவியாம் விடயமுணரவிரியாம,-லொருங்கு நெஞ்சங் கருவியாந்தன்னை புணர, எ-ம், மட்டறவோடு மனத்தை நிறுத்திக்—கட்டுதல், வீடு விடுத்திடல் கட்டென்றும், (திருமந்திரம்) மலமாயை மாயை மாயை மயக்கம்,—மனமாயை தான்

மாய, மற்றொன்றுமில்லை, பினமாயவேண்டாம், பிதற்றவும் வேண்டாம், தனையாய்த்திருப்பது தத்துவந்தானே (எ-ம், வாசிட்டம்—சனனகருமங்களின், வித்தாய்த் தருவையசைக்கும் காற்றேபோற், றினமு முடலையசைப்பதுவும் சித்தமிதனைத்தீர்வதுவே,—அனகசகலத்தியாகமதாம், அதுவே பரம ஆனந்தம், எ-ம், (திருக்கடைக்காப்பு)—கள்ளநெஞ்சவஞ்சகக் கருத்தை விட்டருத்தியோ,—டுள்ளமொன்றி யுள்குவாருளத் துளானுகந்தவூர்,—துள்ளுவாளைபாய் வயற்சுரும்பு நாறுநெய்தல்வா,—யள்ளனுரை யாரல்வாரு மந்தணாரூரென்பதே எ-ம், (தேவாரம்) வெள்ளத்தார்விஞ்சையார்கள்,விரும்பவே,—வெள்ளத்தைச் சடைவைத்த விகிர்தனார்—கள்ளத்தைக்கழிய மனமொன்றினின், றுள்ளத்தினொளியைக்கண்டதுள்ளமே, (திருப்பாட்டு) குண்டலங்குழை திகழ் காதனே யென்றும், கொடுமழு வாட்படைக் குழகனேயென்றும், வண்டலம்பு மலர்க் கொன்றையனென்றும், வாய்வெருவித்தொழுதேன் விதியாலே.- பண்டைநம்பல மனமுங் களைந்தொன்றாய்ப், பசுபாசப் பதிவினவிநாளும்,—கண்டலங்கழிக்கரையோதம்வந்துலவுங், கழுமல வளநகர் கண்டுகொண்டேனே. எ-ம்.

(பட்டினத்தடிகள்) இருக்கு மருதினுக்குளிமையோர்களு நான்மறையு—நெருக்கு நெருக்கத்து நீளகத்திற் சென்று மீள வொட்டாத்,—திருக்குமறுத்தைவர் தீமையுந்தீர்த்துச்செவ்வே

மனத்தை,—யொருக்கு மொருக்கத்தினுள்ளே முளைக்கின்ற வொண்சுடரே, என்ம், மற்றும் வருவனவற்றுற் காண்க.

ஆதலான் இனி மனமடக்கு முபாயமாவதியாதெனின் விஷயங்களைக் கருதாநிற்கு மனத்தின் குணங்கள், சத்துவ முதலிய மூவகைத்தாம், அச்சத்துவ முதலிய முக்குணங்க ளுண் மனதிற்குச் சத்துவமே உபாதானமாகலின், அதற்கு அதுவே, சொரூபமாம். ஏனையவிரண்டும் சகாயமாக இடையே பொருந்தின, அவைகளை நீக்கினுல் நீங்கும்.

(நீக்குமுபாயமாவது) மனத்தினியற்கை யுருவமான சன்மார்க்கமான தெய்வ சம்பத்தை விடா தநுட்டித்து நிற்கும் போது, விடய பரிணுமவேதுவான தமோகுணமும், சலன வேதுவான இரசோகுணமும் நசிக்கும், பின்னர் கனமாகிய விடயபரிணுமமும், ஒன்றி னின்றென்றிற்றுவா நிற்கும் சலன மும் அதன்கணீங்கிப்போம். அவை போகவே மனமானது மேகபடல முதலிய களங்கமற்று நின்ற சரற்காலவானம் போலச் சுத்தமாய் அசஞ்சலவதி சூட்சுமமாம். ஆகவே, யப்படி அசஞ்சல அதி சூட்சுமமாகிய அந்தப்பிரமத்தில் ஏகரசமாய் நிருவிகற்ப சமாதியிற்றுனே நிற்கும்.

மனது நிருவிகற்ப சமாதியிற் பிரமத்தோ டேகமாய் நிற்றலெதுபோலவெனின், பரிசுத்தமான வோர் கண்ணுடியைக் காண்பிக்கும்போது நிர்மலமாகிய அக்கண்ணுடி மயமாயபேதமாய் விகற்பமின்றி, நிருவிகற்பமாந் தன்மை போல

அளவிட்டறியப்படாத வியாபகமாய்ச் சச்சிதானந்த சொரூப மாயுள்ள பிரமத்தின்கண் ணையிக்கமாம்.

இவ்வாறேக ரசமான அந்தக்கரணந் தெளிந்தவண்ண மிற் தநன்னிலையுற்ற பெரியார்க்குச் சிவமேயன்றி, யுலகந் தோன்ருது. துகளென்னும் இராசோகுணமும் இருளென்னும் தமோகுணமும், சன்மார்க்கமான, ஞானப்பியாசத்திஞல் நாச மாய்விடின், மனமென்னும் விவகாரமும் நீங்கிவிடும். நாமி தற்கு கர்த்தாவென்னும் அகம்பாவமு மொழிந்துபோம். இன் புருவாயிருக்கவுமாம். என்று ஞான சாஸ்திரங்கள் கூறப் படுகின்றன. ஆதலால் இவ்வாறு மனத்தினியல்பை ஆராய்ந் தறிந்து, துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி, யின்பம் பயக்கு வினை, எ-ம், உளக்கித்தாங்கொண்ட விரதங்களுள் ளுடையத், தாக்கருந் துன்பங்கடாந்தலை வந்தக்கால், நீக்கி நிறூஉமுரவோரே நல்லொழுக்கங், காக்குந் திருவத்தவர், எ-ம், மெய்வருத்தம் பாரார் பசி நோக்கார் கண் துஞ்சார், எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார், செவ்வியருமையும் பாரார் அவமதிப் புக்கொள்ளார் கருமமே கண்ணுயினர். எ-ம், கூறப்பட்டுள்ள மேலோர் திருவாக்குகளைக் கடைப்பிடித்து நானுவித வுபாயங் களால், எவ்விதத்திலாவது மனத்தையடக்கமுயலவேண்டும். உ-ம், வாசிட்டம், வருந்தி முயன்று மனந்தன்னை மாற்றி யில்லையுண்டென்று திருந்த பதத்திலிருத்திடுவாய், எ-ம், மற்றும் வருவனவற்ருற் காண்க. மனம் அடக்கு முபாயங்க

வாவன என்னையெனில், மதங்கொண்ட யானையையடக்க எப்படி அங்குசம் இன்றியமையாக் கருவியோ, அதுபோல, அத்யாத்ம வித்தை, சாதுசங்கம், வாசனுக்ஷயம், பிராண சல னிரோதனம், இவை நான்குமே, மனமடக்கு மூபாயங்களென் றும், இவையின்றி வேறு சாதனங்களான் மனமடக்க முயல் வோர் தீபமின்றி இருட்டையிருட்டாற் போக்க முயல்பவர் களொப்பாவார், என்றும், வசிட்ட பகவான்வாசிட்டத்திற்கூறி யிருக்கின்றார். (உ-ம், வாசிட்டம்,) உளகநன்மையாலல்லது வெலப்படாதுள்ளம், வேகமத்தமா வங்குசத்தலால் வெலப் படுமோ, எகபோதத்தை யோர்தல் நல்லவருட னெய்தல், சோகவாதனை விடலுயிர்தோன்றுரு தொடுக்கல்,—உளர்செய் நால்வகையு நெஞ்சை, யொடுக்கு மூகங்களாகும், புரையிலா விவற்றுக்குள்ள மொடுங்குதல் புயன் மழைக்குத் தனையுறு தூளிபோலாஞ், சாற்றுமூகங்களின்றி, விரைவினெஞ்சடர்ப் பார் தீபம் விட்டிருளிருளாற்றீர்ப்பார், எ-ம், அன்றி—எந்த வெந்த வாதனைகளிதயத்தெழுந்த வவையெல்லாம்—அந்தவந்த விடத்தழிக்கினதுவே மாயைக்கழிவாகும், எ-ம், எங்கே யெங் கே மனமோடியினையோரென்னவீழ்ந்தழுந்து—மங்கே யங்கே நின்றெழுப்பிய கண்டவறிவினை வித்தான், எ-ம், மற்றும் வருவனவற்றுற் காண்க. இனி, எகபோதத்தை யுணருமியல் பும், வாசனுக்ஷயம் பண்ணுமுபாயமும், இந்தவிரண்டாம்பாக த்தின் முன்னர்க் கூறியிருக்கின்றன. நல்லவருடனெய்தல்,

என்பதின் விபரம், முதற் பாகத்திற் புகன்றிருக்கிறது. ஆதலால் இவ்விடத்திற் சங்கிரகமாக நல்லா ரென்னுஞ் சாதுக்களியல்பு கூறுதும். (சாதுக்களாவார்) விடயபோக மோகமின்மையராய், நிராசையுடையராய், இந்திரியநிக்கிர கமுடையராய்ச், சுத்த மனமுடையராய், இறைவன் மாட் டன்புடையராய், முத்தி விருப்பமுடையராயுள்ள தூயர்களே யாம். (உ-ம்.) திருத்தொண்டர்புராணம் என்னும் (பெரிய புராணம்) ஈண்டு சாதுக்களென்றெடுத் தோதிற்று, வேண் டும் வேட்கையெல்லாம், விமலர்தாள் பூண்டவன்பினிற் போற்றுவீர் சார்மினென், ருண்டசண்பையரச ரருளினர் எ-ம், பூதமைந்து நிலையிற் கலங்கினும், மாதொர்பாகர் மலர்த் தாண் மறப்பிலார் (எ-ம்) கேடுமாக்கமும் கெட்டதிருவினர் ஓடும் செம்பொனுமொக்கவே நோக்குவார், எ-ம், சோணசைல மாலை) சுருக்குமைம்புலனும் விரிக்கு மூதறிவும், துன்னு நல் வினமும் நீத்தகன்றே,—யிருக்கும் வெங்கயவரினமு மென்ற ருளி (எ-ம்) நீக்குறு மயலுநிலைத்த பேரறிவு நின்றிருமலரடிக் கன்பு,—காக்குறு மனமுமுடைய மெய்த்தொண்டர்கணத்தி னுளெனை விடுத்தருளாய், (எ-ம்,) வேணவா வகன்று நின்றிரு வடிக்கீழ் மெய்ம்மையன்படைந்து பொய்ப்பிறவி,—நாணுவா ரினங்கண்டுறும்படி தூயஞான நாட்டம் பெறவருள்வாய். எ-ம், (சிவதருமோத்தரம்) மண்ணினுந் தனத்தினு மனைக்கு வாய்த்தநற்,—பெண்ணினு மகவினும்பெரியபேரினும்,—துண்

ணென விழைவினைத்துறந்த தூயரே,—விண்ணினு மின்புற விளங்கிமேவுவார், எ-ம், (ஞானசூரியன்) உடலையொண்பொரு ளினை யுலகியல்பினை யுயர்குலநெறிதன்னை, யடையுமைந்தர் தாய் தந்தை நன்மனையென வறைதரு மவர்தம்மை—விட விகழ்ந்திறை சழலிணை மருவிய விமலர்தங்களை யெல்லாம், உடைய நன்குறுமொழிமறைமுநிவர்களுரைப்பராத்தர்களென்றே, எ-ர், (வாசிட்டம்) இயற்கையாகிய குணத்தினரிழிவுயர் விரண்டும், நயக்கலாதவர் சமமுளோர் நன்னெறி நடப்போர், வியக்குமாறு தன்கணா கடா வேலையை யொப்போர், மயக்கிலாதவரிரவிபோல் நியதியைவழாதோர் (எ-ம்) மற்றும்வருவன வற்றுற் காண்க: (இனிப் பிராணசலன நிரோதனம், யாதெனின், காமாதி விருத்திகளாகிய பணைகளையுடைத்தாயிருக்கிற சித்தமாகிய விருக்ஷத்திற்கு, வாசனையென்றும், பிராணசலனமென்றும், இரண்டு விதைகள், இவ்விரண்டு நீங்குமாயின், சித்தஞ் சாந்தமாம். என்றும்,இவற்றொன்று நசிக்குமாயின் மற்றொன்று தானே நீங்கும். என்றும், பிரமத்தியானத்தினுல் மனது நிக்கிரகிக்கப்படும்போது, அதற்கவாந்தர பலமாகப் பிராண நிரோதஞ்சித்திக்குமென்றும், பிராணயாமாப்பியாசத்தினுற் பிராண நிரோதம் வரும்போது, அதற்கவாந்தரபலமாக மனோநிக்கிரகஞ் சித்திக்குமென்றும், நூல்களிற் கூறப்படுகின்றன. உ-ம். (திருமந்திரம்) மன்மனமெங்குண்டு வாயுவுமங்குண்டு, மன்மனமெங்கில்லை வாயுவும், அங்கில்லை.

எ-ம், (வாசிட்டம்) உயிரினசைவொன்று வாதனை யொன்றுக வுபயமாமனத்தின் விதை யிவற்றினென்று பயில்வுறமாய்ந் தாலிரண்டு முடனேமாயும். எ-ம். மற்றும் வருவனவற்றுற் காண்க. பிராண சலன நிரோதத்திற்கு முக்கிய வுபாயம் யாதெனின் பிராணுயாமத்தின் திடவப்பியாசம், குருவினு லுபதேசிக்கப்பட்ட யுச்தியேயாம். என்பர், பிராணுயாமாப்பி யாசம் பண்ணினுற் பிராணசலனம், நிரோதிக்கப்படும், அத ஞன் மன நாசஞ் சித்திக்கும். இப்பிராணுயாமக்கிரமங்களை அடயோக சாஸ்திரத்தில் விரிவாய்க் கூறியிருக்கிறது. ஆத லாலிவ்விடத்திலவற்றை விரிக்கிலேம்.

(இனி, இயமமாதிஅட்டாங்கம்) இயமமாவது, பிறவுயிர்க் கிம்சையின்மை, பொய்யின்மை, திருடின்மை, பிறர்பொருளை யபகரித்தலின்மை,அடக்கமுடைமை முதலியன(நியமமாவது) தேகாதிபுறச் சுத்தம், மனமாதியகச் சுத்தம், பெற்றதைக் கொண்டு சந்தோஷம், தவசு, வேத அத்தியயனம், ஈசுரத் தியான முதலியன, (ஆசனமாவது) பதும முதலான யாதோ ராசனத்திலிருந்தாற் றியானஞ் செய்வதற்கு ஸ்திரமாய்ச் சுக மாயிருக்குமோ அதுவே சுகாசனமாம். (பிராணுயாமமாவது) இரேசக, பூரக கும்பகக் கிரமங்களேயாம், (பிரத்தியாகார மாவது) சத்தாதி விஷயங்களிலே நின்றும், சுரோத்திராதி யிந்திரியங்களோடு மனதையந்தர்முகமாகத் திருப்பிக்கொள்வ

தேயாம். (தாரணையாவது அந்தர்முகமாகத்திருப்பிக்கொண்ட மனதைப் பிரத்தியகாத்மசொரூபத்தில் நிறுத்துவது (தியானமாவது) அந்தச் சொரூபத்தில் மனதுக்குப் பிரமாகார விருத்திப் பிரவாகமுண்டாகுவது. சமாதி யியல்பு முன்னமே கூறியிருக்கின்றோம் ஆண்டுணர்க. தியேயாகாரமான சித்த விருத்தியைத் தியானமென்பர். அத்தியானம் விச்சின்னத் தியானமென்றும், சந்ததத்தியானமென்று மிருவகையாகும். அவற்றுள், விச்சின்னத் தியானமாவது, தியானஞ் செய்யும் பொழுது இடையிடையே விட்டு விட்டு அநான்மாகார விருத்தியையடைந்த போதிலும், மீண்டு மீண்டும் புருஷ முயற்சியினா லனான்மாகார விருத்தியைத்தள்ளிப் பிரமாகார மனோ விருத்தியைச் சம்பாதிக்கிறதேயாம். அப்பியாச பலத்தினாற் றயிலதாரைபோல விச்சின்னமாயுண்டாகிற பிரமாகாரமனோ விருத்திப் பிரவாகமே சந்ததத் தியானமாம், இவற்றுள் விச்சின்னத் தியானத்தைப் பழகப் பழகச் சந்ததத் தியானமுண்டாம், சந்ததத் தியானத்தைப் பழகப்பழகச் சவிகற்ப சமாதியுண்டாம், நிருவிகற்ப சமாதிக்கிச் சாதனமாயிருக்கிற, இயம முதலான பதினைந்தங்கம், இராஜ யோகாநுசாரமாக, ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் அபரோக்ஷாத்மாநுபூதிப் பிரகரணத்தில் அருளிச் செய்திருக்கின்றார், (அவைகளின் விபரம் சிவன் முத்திப்பிரகரண முதலிய நூல்களிற் கண்டுகொள்க,

(இனி, இச்சாதனங்களைக்கொண்டு சாதித்துப் பேரின்பம் பெறுவதற்குரிய அதிகாரியாவார், யாரெனின்) மலின வாசனைகளாகிய அசுத்தவாசனைகள் நீக்கி, தெய்வசம்பத்து முதலிய சுத்த வாசனைகளையுடையவராயும், விவேகாதி நான்கு சாதனங்களையுமவதி பரியந்தமுடையவராயுமுள, உத்தமோத்தம பக்குவமுடைய புருடரேயாம், இஃதன்றி இத்தேசத்தன், பிராமணுதியிவ்வருணத்தன், பிரமசாரியாதி யிவ்வாச்சிரமத்தன், பேரின்பமடைதற்குரிய அதிகாரியென்னும் நியமமின்று, யாராயினு மேற்குறித்த விவேகாதி சாதனசம்பன்னனுயின், அவனே உத்தமோத்தம அதிகாரியென்றுணர்க. (இனிச் சாதகஞ் செய்யுமா றியாதெனில்,) சாத்திரத்திற் சொல்லா நின்ற நித்திய கருமங்களனைத்தினுள்ளும், இன்றியமையாது செய்யவேண்டுங் கன்மங்களில், ஓரோர் சிறிது சீக்கிரத்திலே செய்து விடுத்துப் புகல்கின்ற வாக்கினை மௌனமாக்கி, ஏகாந்த ஸ்தானத்திலிருந்துகொண்டு, அருட்குருவின் றிருவடிகளைத் தோத்திரம் பண்ணிப் பின்னர், அவர் கூறிய வுபாயத்தின்படியே மனோலயம்பண்ணத்தொடங்கும் போது, அந்த வுபாயநெறிகளை, மிகவுமுயற்சிப்பட்டு மன வருத்தமும் அடையாமல், எவ்விதத்தாலடக்கினும் இதுஅடங்குவதில்லையென்று உள்ளம் வருந்தி அவ்வுபாய நெறியை விட்டு நீங்குதல் செய்யாமலும், மெல்லப் பைய அம்மனத்தினைச் சகமுகமாய்ச் செல்லவொட்டாமல் அகமுகமாக்கி யெக்

காலமும், ஒப்பற்ற பஞ்சேந்திரியங்களையும் நிக்கிரகம் பண்ணி மனத்தினது சங்கற்பத்தை நாசம் பண்ணவேண்டும், (உ-ம்) வாசிட்டம்) மிகமுயன்று வருந்தாமற் சமமாகின்ற, என்ற செய்யுள் முதலியவற்றுற் காண்க.

மற்றும்—சாந்தாத்மா எல்லாவற்றிற்கு, மாந்திரராய்ச் சின்மாத்திர சொருபராயிருக்கிருரென்றுமவரிடத்துச் சடமாயவ்வியக்தமாய், ஓரஞ்ஞானங் கற்பிதமா யுண்டென்றும் அந்த வஞ்ஞானமுன்னர் சாமானிய வகங்கார மென்கிற ரூபத்தையும், மகதத்துவமென்கிற நாமத்தையும் பெற்று வியத்தமாகிறதென்றும், பின்பதற்குப்பாகியத்தில் விசேஷ அகங்காரரூபமாகவு, மதற்கு பாகியத்தில் மனோ ரூபமாகவும் அதற்குப் பாகியத்தில் வாக்கு முதலான இந்திரிய ரூபமாகவும், வியத்தமாகிறதென்றும், கடவல்லிய வுபநிடதத்திற் கூறிய முறைப்படி பாகியமான ஒன்றொன்றை ஆந்தரமான ஒன்றொன்றில் அடக்கிக்கொண்டு வரும்போது, சர்வாந்தராயிருக்கிற சாந்தாத்மாவினிடத்துச் சமாதி சித்தித்துச் சொருபானுபவங் கிடைக்குமென்று பெரியோர் கூறியிருக்கிறார்கள்.

அன்றி தத்துவஞானமுதலிய அப்பியாசக்கிரமங்கள் வாசிட்டத்திலீலை கதையில், என்ற வாணியையித்திறமியற்றுமாறென்னென, என்ற செய்யுண்முதலியவற்றிற் கூறியிருக்கின்றன. பின்னும், உலகத்திலுள்ளமாந்தர்கள், அன்னம்புசிக்கும்

போது அதில் வெறுப்புத் தோன்றுதிருக்கிறதற்காக, இடை யே பதார்த்தம், குழம்பு, ரசம், பச்சடி முதலானவைகளைச் சேர்த்தெப்படி யன்னத்தைப்புசிக்கிறுர்களோ, அதுபோலத் தியானுப்பியாசமுதலிய அப்பியாசஞ் செய்கின்ற புருடனும், அவற்றிற் கனுகூலமான செயல்களைச் செய்துகொள்ளவேண் டும். அச்செயல்களாவன, சத்தியுள்ளமட்டு முன்னந்தியா னஞ் செய்து பின்பு, சாஸ்திர சிரவணத்திலாவது, குருசிசுரு ஷையிலாவது, அல்லது தியானத்துக்கந்தரங்கமான சாஸ்திர த்தைப்பரியாலோசனை செய்வதிலாவது மனதைச்செலுத்த வேண்டும் பின்னர்த்தியானஞ் செய்யவேண்டும். இப்படித்தி யானத்தை முக்கியமாய் வைத்துக்கொண்டு குருசிசுருஷை சாஸ்திர சிரவணுதிகளை யிடையிற் கலந்துகொண்டு தியானுப் பியாசம் செய்யவேண்டும். செய்யும்போதுதியானத்துக்குபிரதி பந்தமாக, லயவிக்ஷேப கஷாய, ரசாஷ்வாத முதலியன வரு மாயின், அவைகளின் காரணங்களை யாராய்ந்தறிந்து நீக்கிக் கொண்டு மீண்டுந்திடமாய் நின்று சாதகஞ் செய்யவேண்டும், என்று, ஸ்ரீவசிட்டர்முதலிய பெரியார் கூறியிருக்கிறுர்கள். (இனிச்சாதகஞ் செய்வோர் முன்பின்முறையே பயிலவேண்டு மியல்பு,) முன்னம், மானச வாசனைகளை நிவர்த்தித்துப்பின், விஷயவாசனைகளை விடல் வேணடும். எ-ம், அதன்பின் நிர்மல மாயிருக்கிறமைத்திரியாதி வாசனைகளிற் பயின்று பின் மைத் திரியாதி வாசனைகளை யுடைத்தானவனுனென்கிற அபிமான

மின்றிச் சகலவாசைகளு நீங்கிச், சின்மாத்திர வாசனையைப் பயிலவேண்டும் எ-ம், அதன்பின் சவிகற்பமாயிருக்கிற சின் மாத்திர வாசனையையு நீங்கி, ஒரு விகற்பமு மின்றி நிரு விகற்பமாயிருக்கிற சின்மாத்திர சொரூபத்திற் சமாதியை யடைந்து, எம்முயற்சியினுற் கீழ்ச்சொன்னமனேவிகற்பமெல் லாந் தவிர்ந்ததோ, அம்முயற்சியையும்,விடவேண்டுமென்றும், மீண்டு மீண்டும்பலவிதமான புத்திகளால், ஸ்ரீவசிட்டபகவான் ஸ்ரீ ராமபிரானுக்கு வலியுறுத்திக்கூறியிருக்கின்றுர். மற்றும், தனமதம், குலமதம், லோகாசாரமதம்,முதலானமலினவாசனை களினுற் கட்டுண்டு பீடிக்கப்பட்டிருக்கும் புருடனவற்றை நிவர்த்தித்தற்பொருட்டு, அவைகட்கு விரோதியாயுள்ள விவே கத்தைப் பயிலவேண்டும், அவ்விவேகத்தைச், சனகமஹாரா ஷி வாசிட்டத்திற் காண்பித்திருக்கிறுர். உ-ம். (வாசிட்டம், ஜனகர் கதை.) மண்ணுண்ட மன்னவரு மவர்தனமுமாண்டன நுண்மணலே யொக்கும், என்ற, செய்யுண் முதலியவற்றுற் காண்க, சின்மாத்திரவாசனையாவது.) சர்வாதிட்டான சின்மாத் திர ரூபமான பிரத்தியகபின்ன பரப்பிரமத்தினிட்டத்திற் கற் பிக்கப்பட்ட பாகியாந்தரமான சகலசகத்தும், அந்யோந்நிய அத்தியாசத்தினுலே, அவிசாரதசையிற் சித்து ரூபமாயும் சட ரூபமாயுந் தோன்றும், கடந்தோன்றுகிறது புடந்தோன்றுகி றது, குட்டியந் தோன்றுகிறது குசூலந்தோன்றுகிறது என் னுமவைகளே,இவற்றிற்கநுபவம். இப்படியவிசாரதசையிற்சக

லஜகத்துஞ் சிற்சடவுபயரூபமாய்த் தோன்றினாலும் விசாரித்துப்பார்க்கும்போது, கற்பித ஜகத்து அதிட்டானசித்தினாலே தோற்றப்படுகிறபடியாலந்தச் சகத்துச் சடந்தான் ஆகவே முந்தியதிட்டானமாய்ச் சித்தித்திருக்கிற பிரமசித்தே பின்பு ஆரோபிதமாய்த் தோன்றுகின்ற ஜடஜகத்துக்கு நிசமாயிருக்கப்பட்ட சொரூபமென்று சுருதி யுத்திகளாற் றெளிவாய் விசாரித்தறிந்துகொண்டு பின்பு கற்பிதமான சர்வஜகத்தையும், சர்வாதிட்டான பிரத்தியக பின்ன பிரமசித்து ரூபமாக நினைத்துப், பின்பகண்டேக ரசமான பிரமமே நாமென்று பாவனை பண்ணுவதேயாம். இவ்வண்ணமே சுருதிகள் கூறியிருக்கின்றன. இதற்கியைய வாசிட்டத்தில், யாபலி சுக்கிர சம்வாதத்திற் கூறியிருக்கிறது. (உ-ம்) வாசிட்டம், வருங்கற் பசுவின் விரைந்தேக, வந்தேன் பலசொல்லியும் பயனென், சுருங்கச் சொல்லும் பயன் கேளாய், தோன்ற விங்குள்ளதுவுஞ் சித்—தொருங்கப் புறத்துஞ்சித்தெல்லை, யுள்ளதுஞ் சித்தெல்லையற, நெருங்குற்றதுஞ் சித்தியான் சித்து நீ சித்துலக நிறை சித்தே, (எ-ம்), இதுவே சுருக்கமிவ்வறுதி, யிதயங்கொண்டிவ்வகைக் கேற்ற—மதியானின்னை நினை நீயே மாறுதுணர்ந்து நோக்குதியே,—லதனலந்தமாம்பதத்தையடைதி, (எ-ம்,) மற்றும் வருவனவற்றுாற் காண்க.

இனி, (மைத்திரியாதிகளாவன) சத்புருடரோடு நட்பு, துக்கப்படும் சீவர்களிடத்திற் கருணை—புண்ணியர்பால் விருப்

பம்—பாவிகள்பால் உபேக்ஷை—என்பன முறையே காண்க. இவைகளின் விரிவைச்சீவன் முத்திப்பிரகரண முதலியநூல்களிற் கண்டுகொள்க. நிருவிகற்ப சின்மாத்திரசொரூப நிட்டையாகிய சமாதி திடப்படுவதற்குரிய வோரநுட்டானம் போதாதோ, மேற்கூறியவைகளெல்லாம், எற்றிற்கென்னின்—பலவிததொந்த நோயுற்றவொருவன் அந்நோய்களைநிவர்த்திக்கும்பொருட்டு முன்னமே பேதிக்குச்சாப்பிட்டுப்பின்பந்த நோய்களுக்கேற்ற ஔடதங்களையுமுட்கொண்டு அவைகட்கேற்பப்பத்தியங்களையு மேற்கொண்டாலன்றி அவ்வியாதிகள் போகாவாம் அவைபோல, அஞ்ஞானத்தின்காரியமாகியபலநோய்களையுற்ற புருடன், அவைகளை நிவர்த்திக்கும்பொருட்டு ஞானநூல்களிற் கூறிய வுபாயங்களாகிய சாதனங்கள்யாவும், ஒருதலையாவேண்டப்படும் என்று பெரியோர்கள்புகன்றிருக்கிறார்கள். ஆதலான் மேற்கூறிய சாதனங்கள்யாவும், நெடுங்காலம் நிரந்தரம் நேசத்தோடு பரமானந்த சொருபராயிருக்கிற பிரமசொரூபத்திற் பாலிற்கலந்தஜலம்போல மனது ஏகரசமாய்க்கலந்துசொரூபானந்தாநுபவத்திலழுந்தும், அளவும், கிரமமாயநுட்டிக்கவேண்டும், என்றுணர்க.

இனி, (இன்புற்றோரியல்பு,) இங்ஙனங்கூறிய உண்மை நிட்டைகள் வந்து பரமானந்தம் பெற்றுள்ள ஞானிகளாயினோர்பின்பு ஓராடல்பாடல்களைச் செய்தார்களாயினும், அத்தொழில்கள் எல்லாமானந்த லீலையாய் முடியும். அவரது

செயற்பா டொருவரால் நிச்சயிக்ககூடாதென்றும், சோறிடு தற்குநாடும், கோவணத்துணி கொடுத்தற்குக் குப்பைமேடும் இயல்பாக விருத்தலின் அவற்றினைக்குறித்தொருவரை யநு சரித்தற்கு ஞானிகளாயினோர் மறந்தாயினு நினைப்பதில்லை, என்றும், ஆகாரத்தைக் குறித்தேகுமிடத் தெதிரேகண்ட உடைசலோடாயினும் கைகளா, யினும், நாடோறும் பலி யேற்றுண்பதற்குப் பாத்திரமாக உளவாகலின் ஞானிகளாயி னோர் ஏற்றுண்ணு மோட்டினைக்குறித்தாயினு மொருவரை யனுசரியார், என்றும், ஞானிகளாயினோர்க்குப் பாழ்ங்கோ யில் மலைமுழை முதலிய ஏகாந்தத்தலங்களே இல்லமாதலி னாலும் அன்னோரானந்த நித்திரை செய்தற்குத்தரையே பூவ ணையாதலினாலும் அவற்றினைக்குறித்து மொருவரையனுசரி யார், என்றும், ஏகமாகிய பரம்பொருளையேயன்றி எக்கால முமெவ்விடத்தும் அவ்வஸ்துபின்னமாக வோர் பொருளையுங் காணு வொப்பற்றதவத்தோராகிய ஞானிகட்கு முண்டுகொல் லோ இவ்வுலகத்தின்கண் பெறுதற்குண்டாகியபோலுமுறவும் பகையும், என்றும், உள்ளன இல்லன செய்யப்படுவன செய் யப்படாதன, உயர்ந்தன தாழ்ந்தன நான்பிறனென்பன ஆதி யவனைத்தும் பரமயோதலால் அவ்வுண்மையறிந்த ஞானிகளா யினோர் இச்சைப்படியே செய்யாநிற்பர். விதிநிடேதங்கள் ஒழி ந்தென்றும், உயர்ந்த கருணையே வடிவாக வுடைய பரம்பொ ருளுடனேகூடி, இரண்டறக்கலந்துள்ள முத்தரும், இத்த

சைக் கண்ணுண்டாகிய சராசரங்களிடத்தெல்லாம் அருளை நீங்கார் என்றும், அவிரோதவுந்தியாருக்குச் சிதம்பர சுவாமி கள் பிரபலப் பிரமாண வாயிலாக அருளிச்செய்த வுரையாற் பேரின்பம்பெற்றோரிப்பெற்றியரெனத் தெற்றென வுணரப் பெற்றும்.

இனி, அம்மெய்ஞ்ஞானிகள் எவ்வெவ்ப் பெயர் பெற்றுப் புகழப்படுகின்றார்களெனின், திடப் பிரஞ்ஞன், பகவற் பத்தன், குணாதீதன், பிராமணன், அதி வருணாச்சிரமி, என்றி வை முதலான நாமங்களேயாம், இந்நால்வருள், சீவன் முத் தனியல்பு வாசிட்டத்தில் விரிவாய்க் கூறப்படுகிறது. பகவற் கீதை யிரண்டாமத்தியாயத்திற் றிடப்பிரஞ்ஞனியல்பு, புகன் றிருக்கிறது, ஷை கீதை, பதினாலாமத்தியாயத்தில், குணா தீதனியல்பு கூறப்பட்டிருக்கிறது. ஸ்ரீ வியாசாதி முனிவர்க ளாற் பிராமணனியல்பு பேசப்பட்டிருக்கிறது. சூதசங்கிதை முத்தி காண்டத்தில், ஸ்ரீ பரமசிவனவர், அதி வருணாச்சிர மியினியல்பு அருளிச்செய்திருக்கிறார் இவற்றின் விபரங்களை விஸ்தாரமாயறிய விரும்புவோர், சூதசங்கிதை முத்திகண்டம், பகவற் கீதை,, ஞான வாசிட்டம், சீவன் முத்திப் பிரகரண முதலிய நூல்களிற் பரக்கக் காண்க.

இனிப் பின்னு பின்னத்வ வாதம் பிழையேயாம், என்று பெரியார் புகன்றிருக்கு நியாயங்களைச் சிறிது விளக்குதும். (என்னை) வீடென்பசுற்குப் பொருள் = விடுதலை, விடுதலை

யாவது, பந்த நீக்கமாகலின், பந்தமொன்று உண்டென்பதும், அஃதுண்டாகவே பந்தத்தினாலே, கட்டுப்பட்டிருந்து அதி னின்று விடப்படுவோ னுண்டென்பதும், பந்தம் சடமாகையி னாலும், பந்தமுடையான் சுதந்தரமிலனாகையினாலும், உயிர் களுக்குப் பந்தத்தை நீக்கி முத்தி கொடுப்பான் ஒரு சுதந்திர கர்த்தாவுண்டென்பதும் பெறப்பட்டமையால், வீட்டு நெறி யாராயும் பலசமயிகளினுடைய துணிவும், பரசீவ பந்தங்கண் மூன்றையும், விசாரித்தலேயன்றி வேறில்லையாயினும், அத் திரிவித பதார்த்தங்களினது உண்மைகளை அவரவர் கருதிக் கொள்ளுங்கோட்பாடுகள் வெவ்வேறென்றும், பரசீவபந்தங்க ளென்றுசொல்லப்பட்ட திரிபதார்த்தங்களுமுண்டென்பதே, நூல்களினுடைய துணிபென்றும், அவற்றினையொன்றுக் கொண்டுபேதமென்றும், அபேதமென்றும், பேதாபேதமென் றும், நிச்சயித்துக் கூறுதல் ஒருவருக்கும், முடியாதென்றும், ஏனெனிற் பரசீவ பந்தங்களின் உண்மை மனத்திற் கெட்டா தென்றும், சுருதியாதிகள் கூறுகின்றமையால், இத்தசையின் கண், நிச்சயிப்பதெல்லாம், மனத்தைக்கொண்டாதலாலஃது, மிகுந்த வந்தகாரத்தின்கண் வழிகாணாது மிகவும் வருந்திய வொருவன், மின்மினி விளக்கத்தைக் கருவியாகக்கொண்டு தனது இல்லிடத்தைக்கூடுவானினைத்துச் செல்வதுபோலும், பேரந்தகாரமாகிய அஞ்ஞானவிருளின் மறைந்துள்ள சீவன், கிஞ்சித்தாகிய மனவிளக்கத்தைக்கொண்டு, தனதுண்மையை

விசாரிக்கத்துணிந்தது என்றும், பேதவாதம், அபேதவாதம் சாதித்தல், சுருதி யுத்திகளுக்கு முரணுயுள்ளவையென்றும், பேதா பேதமென்பாருமுளர். அங்ஙனம் ஒரு பொருளிருப்பது விருத்தமாதலினாலும், அதுவும், துணிவின்கண் முற்கூறிய விரண்டினுள், ஒருபக்ஷத்து அடங்குமென்றும், அவ்விருபக்ஷத்தின்கணுள்ள, பிரபலதோஷங்களை,அவிரோதவுந்தியாருக்குச் சிதம்பர சுவாமிகள் தாமருளிச்செய்த வுரையுட் பலபிரமாண வாயிலாக விளக்கிக்காட்டியிருக்கின்றார். (அவை வருமாறு,) அவற்றுள், (ஏகவாதஞ் சாதித்தல் கூடாதென்பதின் விவரம்) சிவபரங்கள் ஏகமென்னும் பக்ஷத்தில், வஸ்துவுக்குப் பந்தம் இன்மையால் முத்தியேயில்லை, பந்தமுண்டாயினும் முத்தியில்லை, பரத்தினது லீலையால் பந்த மோக்ஷமுண்டாயினும் பின்னும் லீலையாற் பிறப்பின்கண் சாராநிற்பர், சாரும்பொழுது முன்பு முத்தியடைந்தது அவமாகப் பந்தம் நித்தியமாய் விடுமாதலின், ஒன்றென்பது கூடாது. அஃது எங்ஙனமெனின், சிவபரங்கள் ஏகமேயென்னின், இங்ஙனம் துவிதபாவனை வருவானேன், பந்தத்தாலெனின், வஸ்து நின்மலனுகையால், பந்த முண்டென்பதே கூடாது. உண்டென்னில் அப்பந்தம் வஸ்துவுக்குப் பின்னமோ, அபின்னமோ, பின்னமென்னில், வஸ்துவை விடப் பந்தம் வேறே ஒரு முதலாக உண்டாதலினால், அவ்வஸ்துவுக்கு ஏகமென்பதே கூடாது. அதுவுமன்றிப் பந்தமுடைய பொருட்குச்

சுதந்திரமின்மையால், அப்பந்தத்தை நீக்குவான், நின்மலனாக ஒரு கர்த்தாவும் மேலே உண்டாகவேண்டும், அங்ஙனம் கர்த்தா இன்மையால் அப்பந்தம் நீங்குதலே கூடாது. அங்ஙனமன்று, அப்பந்தம் வஸ்துவுக்கு அபின்னமேயெனின், அபின்னம் தன்னியல்பாகையால் ஒருகாலும் பந்தம்நீங்காது. இங்ஙனமாதலால் வஸ்துவுக்குப் பந்தம் உண்டாயின், முத்தியுமில்லை. அதற்குப் பந்தமே யில்லையென்றால், அதற்கு முன்பே முத்தியுமில்லை. அஃது ஒக்கும், அந்த வஸ்துவுக்குச் சுபாவத்திலே, பந்தமுத்தியில்லாவிட்டாலும் அதனது சுதந்திர லீலையாலே பந்த முத்திகள், உண்டென்னில் அங்ஙனமாயின், சீவர்கள் வீடு கூடினும் பரத்தினது லீலையாற் பின்னும் பிறப்பின் கண் சாரா நிற்பர். சாரும்பொழுது முன்பு முத்தி அடைந்ததும், அவமாகப் பந்தம் நித்தியமாதலால், சீவபரங்கள் ஏகமென்று கூறுதல் கூடாதெனக் கொள்க. ஷெ வாதத்துள், பந்தத்தை பிராந்தியென்பவரது கொள்கை, பொருந்தாதென்பதின் விவரம்) பிரதிபிம்பம் அவிச்சின்னம், இவைபோலும் சீவர்கள் மாயையில் உண்டாகா நிற்பர். அம்மாயையும் பிராந்தியென்னில், அப்பிராந்தி ஏகத்துவ நிருமலத்துவமுள்ள பிரமத்திற்கு, உண்டாகுதல் கூடாமையால், ஆத்மாக்களது அஞ்ஞானாதி பந்தம் மித்தையன்று. அது யெங்ஙனமெனின், மித்தையாவது விஷயாதி தோஷத்தால், தோன்றும் சுத்திகா ரசிதாதி பிராந்தி ஞானம். அப்பிராந்தி

ஆத்மாவுக்கேயெனின் ஆத்துமாவும், கடதர்ப்பணாதிகளிலே தோன்றும், அவிச்சின்னம் பிரதிபிம்பம் இவைபோலும், மாயையின்கணின்று தோன்றவேண்டும். அதனால் மாயையினாற் சீவரும் சீவர்களால் மாயையும், என்று அன்னியோன்னியயாசிரய தோஷம் வரும். அதனால் ஆன்மாவுக்குத் தோன்றியதென்பது கூடாது, ஆனால் பிரமத்துக்கே தோன்றிற்றென்னில், அதுவும் கூடாது. பிரமம் ஏகமாதலால் விஷய தோஷமும், நிருமலமாதலாற் கரணகர்த்திரு தோஷமும், தோன்றுதலின்மையால், பிராந்தி ஞானமே உற்பவித்தலில்லை. அஃது இன்மையாகவே சீவர்களும் இல்லையாக அதற்கு முன்பே பந்தம் சொல்லுகிறதும் இலலையாய்விடும். அதனாலே பந்தம் மித்தை அன்றென்றதெனக் கொள்க.

இனித் துவிதவாதமுஞ் சாதித்தல் கூடாதென்பதின் விவரம்) சீவபரங்கள் துவிதமாயிருக்குமெனில், பரத்தினது கருணையால், அநாதியே எல்லா வுயிர்களும் முத்தியே அடையாநிற்கும். இப்பொழுது சிருட்டியாதி தொழில் பண்ணுதற்கு இடமேயில்லை. அவை உண்டாயிருத்தலின் சீவர்களைப் பரத்திற்குப் பேதமென்று கூறுதலும் கூடாது.

அஃது எங்ஙனமெனின், வஸ்து பின்னமாய், ஓராத்மாவிருக்கில் அவனும் சித்தாதலால், அவனுக்குப் பந்தம் வருவானேன். அதுவும் செம்பிலே களிம்புபோற் சகசம். அப்பந்தமும் ஆத்மாவே நீக்கிக்கொள்ளில், அநாதியே நீங்கிப்போம்.

அஃதின்மையால் வஸ்துவே நீக்குகின்றனெனில், வஸ்து ஆநந்த சொரூப சர்வதிருப்தனாதலால் அவன் தனக்கு ஒரு பயனும் வேண்டான். அவன் ஆத்மாக்களால், அடையும் பயன் யாது, அங்ஙனம் பயனைக்குறித்ததன்று, வஸ்து ஒப்பற்ற பேரருளுடையோனாதலின், ஆத்மாக்களிடத்து வைத்த கருணையேயெனில் அங்ஙனமாயின் உடனே பந்தம் நீக்க வேண்டும். நீக்குதல் கூடாதென்னின், அசத்தனாதல்வரும், மெள்ள மெள்ள நீக்குவனெனில், பேரருளுடையோனென்பது கூடாது. இதுவன்றியும், ஆத்மாக்கள் நித்தியமாதலாலும், முத்தியையடைந்தோர்கள், பிறப்பின்கண் திரும்பாமையாலும், அநாதியே பஞ்சகிருத்தியம், ஒழியவேண்டும். அங்ஙனமன்று, ஆத்மாக்கள் மிகுதியினாலும், ஓரொருவருக்கும், இருவினையொப்பும் மலபரிபாகமும், வருதல், கிழியீடாதலினாலும், பஞ்சகிருத்தியம், ஒழியாதென்னில் எண்ணிறந்த ஆத்மாக்களும், சிருட்டிக்கு ஒருவர் முத்தியடையினும், எண்ணிறந்த சிருட்டியில் எண்ணிறந்த ஆத்மாக்கள், முத்தியடைதலால், என்றாயினும், ஓர் காலையில், பஞ்சகிருத்தியம் ஒழியாநிற்கும். அப்படி ஓர் காலத்தில் பஞ்சகிருத்தியம் ஒழியின், தோஷம் ஏதெனில், பதியும் பசுக்களும் நித்தியமாதலால் முன்னிறந்த காலத்திற்கு, அளவின்மையால், அநாதியே பஞ்சகிருத்திய மொழியவேண்டும், ஒழியாமையால், இனியோர் காலத்தில் ஒழியுமென்பதற்குப் பிரமாணமேயில்லை. அல்

லது ஒழியுமென்னில், பஞ்சகிருத்திய காரணாரம்பத்திற்கு, அவதி கூறவேண்டும். அது கூடாமையால் பஞ்சகிருத்தியம் ஒழியுமென்பது கூடாது. அங்ஙனமன்று, ஆத்மாக்கள் இடைவிடாது முத்தியடையினும், உலவாக்கிழிபோலத் தொலைவற்றிருக்குமெனில், அக்கிழி தெய்வீகத்தினாலே, பின்னுமிடையறுமல்வர்த்தித்தல் போல, பசுக்களைப் பதிமுத்தியடைவித்தல் செய்ய மேலுமேலும், அதற்கு அதிபதியாகிய, ஒரு பதி, வர்த்திப்பியா நிற்கிறதென்றாலும், அது இல்லை, இப்பதியே தற்காருணியத்தினாலே, உண்டு பண்ணிக்கொள்ளுகிறதென்றாலும், அன்றி ஆத்மாக்களே சகசமாய் உண்டாகா நிற்கிறதென்றாலும், உற்பத்தியே காட்டா நிற்றலால் ஆத்மாக்கள் அநித்தியமென்பது வரத் திரியும். இதுவன்றியும், எண்ணிறந்ததென்னுமுரை, ஆத்ம போதத்திற்கு எட்டாவென்பதொழிந்து சிவத்திற்கும் அங்ஙனம் கூறுதல் கூடாது. அதற்கு அங்ஙனம் தானே, யெனின், ஒரோராத்மா பண்ணியிருந்துள, சஞ்சிதகர்மங்களுக்கு, அளவில்லையாதலின், எண்ணிறந்த ஆத்மாக்கள் செய்த, எண்ணிறந்த கர்மங்களையும் அதற்குக் கோரிக்கும்பதங்களையும், சர்வமுத்தியும், ஏககாலத்தில் அளவிடா நிற்கும் அப்பதிக்கு ஆத்மாக்களது தொகை தெரியாதென்னில், வகை கண்டவனுக்குத் தொகை காணப்படாதென்பது கூடாது. வினையுமளவறுக்கப்படாது. அவரவர்க்கும், அவரவர் கருமங்களுக்கும், அடையாளங்கண்டே

கூட்டுவனென்னில், சர்வஞ்ஞனென்பது கூடாது. எண்ணிறந்த பொருளை, எண்ணிறந்ததென்றறிகிறதே, சர்வஞ்ஞத்வமென்னில், எண்ணிறந்ததென்பது, ஆத்ம லக்ஷணமன்று பலமரம் கூடினது ஒரு சோலையென்பதுபோல எண்ணிறந்ததென்பது ஆத்மசமுதாயத்திற்கு, உண்டானது, ஆத்மாவுக்கு லக்ஷணமானது, சத்து, சித்து,நித்தியவிபுவென்னும் இலக்கணங்கள்; இவை ஓராத்மாவிடத்தும், பல ஆத்மாவிடத்தும், இருத்தல்போல, எண்ணிறந்ததென்னும், இலக்கணமும், அங்ஙனமிருக்கவேண்டும். அது கூடாமையால், அசங்கியம், ஆத்மலக்ஷணமென்பது கூடாது. (இதுவன்றியும்) மூவகை உயிர்களுக்கும், சிருட்டி காலத்தில், பதியினுல் தனுகரணங்கள், கொடுத்துமுடியுமோ, முடியாதோ, முடியுமெனனில், அளவில்லையென்பதே கூடாது. இதுவன்றியும், வரத்தும் இல்லாமல் சிலவும் உண்டாயிருக்கிற பொருள், சிலகாலம் அளவுபடாவிட்டாலும், சிலகாலத்தில் அளவுபட்டுச் சிலகாலத்தில் ஒழியுமென்பதே யதார்த்தமாதலால், சிலவு உண்டாய் ஒழியாத பொருட்கு வரத்துண்டென்பது வரத்திரியும், ஆத்மாக்கள் நித்தியமாதலால், பதியாலளவுபடு மென்னில், அளவு கண்டதற்கு முடிவில்லையென்பது கூடாது. ஆதலால் எவ்விதமும் பஞ்சகிருத்தியத்திற்கு ஒழிவு தோன்று நிற்கும். அங்ஙனமன்று ஆத்மாக்களெல்லாம் நித்திய சமுசாரியும், அனித்திய சமுசாரியுமாய் இருப்பார்கள், அனித்திய சமுசாரி

களெல்லாம், முத்தியடைந்துபோனாலும், நித்தியசமுசாரிகள் இருக்கையால் சிருட்டியாதி தொழில் ஒழியாதென்னில், அநாதியே, அநித்திய சமுசாரிகளெல்லாம், முத்தியடைந்து போய், நித்திய சமுசாரிகள் மாத்திரம், இருக்கவேண்டுமாத லால், இப்பொழுது முத்தியடைவாரில்லையாமென்பது வரத் திரியும் உண்டாயிருத்தலின், அநித்திய சமுசாரிகளை இல்லை யென்பது எங்ஙனம், ஆதலால், சீவபரங்களைத்துவிதமென்று கூறுதல் கூடாதெனக்கொள்க. (ஷ வாதத்துள், பந்தத்தை நித்தியமென்பவரது கொள்கை பொருந்தாதென்பதின் விவ ரம்) ஆத்ம பந்தமாயிருந்துள்ள, அஜன்யமாகிய ஆணவமலத் தை, ஜன்னியமாகிய மாயாகாரியங்களால், முதல் பிரதிபந் தஞ் செய்வித்துப் பின்பு தனது ஞான சத்தியால், பிரதிபந் தஞ் செய்யாநிற்குஞ் சிவமென்னில், அப்பொழுது அச்சிவத் திற்கு, அசத்தனாகுதல் வாராநிற்கும், அதனால், பந்தம் நித் தியமென்பது கூடாது. அஃது எங்ஙனமெனின், யாது நித் தியம், அஃது அஜன்யம், அங்ஙனம் அஜன்யமாகிய ஓராணவ மலம் கண்ணுக்கிருளும், செம்பிற் களிம்பும்போல், அநாதியே ஆத்ம ஞானசத்தியைப் பிறிவறக்கலந்து, மறைத்து நிற்கு மாயின், பிரகாசத்தோடு கூடிய கண்ணுக்கு, இருளும் ரச குளிகையோடுகூடிய செம்பிற்குக் களிம்பும், இன்மைபோலும் நித்திய பூரண சுத்தமாயிருந்துள்ள, சிவத்தோடு, கூடி நின் றுள்ள, ஆத்மாவை அஞ்ஞானம் ஆவரித்தல் கூடாது.

கூடுமென்னில், சிவம் அஞ்ஞானவிரோதியென்பது கூடாது. அது நிற்க, ஆணவமலம், நித்தியமாகின் முத்தி யெங்ஙனம் கூடும். அது பிரதிபந்தப்படுதலின் முத்தி கூடுமென்னில், அங்ஙனம் பிரதி பந்திப்பது யாது, மாயா காரியங்களினூற் பிரதிபந்த மென்னில், அநாதியே அவை கூடியிருக்கவும், முத்தி யெய்தாமையின், அது கூடாது. அங்ஙனமன்று, முத்தி காலத்தில் ஜன்னியமாகிய, சுதவதிட்ட சையோக மாயாகாரியங்களினூற் பிரதி பந்தமென்னில், அவை இரண்டும், ஜன்னியமாதலால், யாது ஜன்னியம். அஃது அநித்திய மென்று அவைகளுக்கு நஷ்டமெய்தானிற்கும்.

அப்பொழுது முத்தியிலும், அஞ்ஞானம், ஆவரியா நிற்கும் அங்ஙனமன்று, அவை இரண்டினூலும் சிவ ஞானம் ஆவரியாத, அஞ்ஞானத்திற்குப் பிரதிபந்தம் வரும், அப்பொழுது சிவஞானம் ஆத்மாவுக்கு விஷயமாம். அச்சிவஞானம் நித்தியமாகையால், அஞ்ஞானத்திற்கு, என்றும், பிரதிபந்த மென்னில், சிவஞானம் அஞ்ஞானத்திற்கு, விரோதியேயாமாகில், அநாதியே முத்திவரும். அஃதின்மையால், இங்ஙனம், பிரதிபந்தப்படுத்துமென்பது கூடாது. அங்ஙனமன்று, அநாதியிலே சிவஞானம் ஆத்மாவுக்கு, விஷயமாகாமையின், முத்திக் காலத்து ஆகுதலின், இங்ஙனம், பிரதி பந்தப்படுத்துதல் கூடுமாயின், சிவஞானமும் மாயாவலியின், ஆத்மாவுக்கு விஷயமாகுதலின், சூரிய பிரகாசத்தில், கண்ணிற்கு விஷய

மான கடம், அப்பிரபை நீக்கத்து, இருளைப் பிரதிபந்தஞ் செய்து, பின்னும் விஷயமாகுதல் கூடாமையின், மாயா நீக்கத்தில், ஆணவமலத்தை, அது பிரதிபந்தஞ் செய்குதல் கூடாது. அதனுனும், மாயாகர்மங்கள் இல்லாவிடில் ஆத்மாவின், ஆணவமலத்தை நீக்குதல் கூடாது என்பதினுலும், சர்வசக்தியுமுடைய வஸ்துவுக்கு அசத்தனுகுதல் வாரா நிற்கும். அதனுல் பந்தம் நித்தியமென்பது கூடாது, என்றதெனக் கொள்க. இதனுற் பேதவாதம் அபேதவாதம் சாதித்தலை விட்டுப் பிரமநிட்டரான பெரியாரையடைந்து, அவர் முகமாக வேதாந்த மஹாவாக்கிய நிச்சயார்த்தத்தைத் தேர்ந்து, உண்மை நிட்டை யுற்றின் புறுவதே துணிபென்றுணர்க, (மேற்கோள்) தாயுமான சுவாமிகள், ஒன்றிரண்டா விவகரிக்கும் விவகாரங்கடந்தேழாம் யோகபூமி நின்று தெளிந்தவர் பேசாமௌனநியாயத்தை. (எ-ம்,) தத்துவராய சுவாமிகள், ஒன்றென்றுநின்றசில, பலவென்றுநின்றசில வுபயத்து நின்றசிலபேய், (எ-ம்,) பொற்பதஞ்சூடிச் சிற்பதவீடு, கையிற் கனியெனக்காணுர். (எ-ம்,) பின்னுபின்னமதெனவே நின்று பிணங்காநிற்பர். (எ—ம்) (வாசிட்டம்) உள்ளத்திலிருமையென வொருமையெனவுன்னுதலஞ்ஞான மிவையொழிதல்ஞானம், (எ-ம்) மற்றும் வருவனவற்றுற்காண்க,

(இதுகாறுங்கூறியுவாற்று லறிதற்பாலனவாய விஷயங்களாவன) நித்தியமுமாயும், பரிபூரணமுமாயுமிருந்துள்ள ஒப்பற்ற

நிரதிசயானந்தமே,ஆனந்தமென்பதூஉம்,மற்றுள்ளமர்யாபோகங்களெல்லாம்,தோற்றமுடையனவாகலால், நாசமும், நாசத்தையடைவதற்கு முன்னும் பரிச்சின்னமாகையால், நீக்கமும், நீக்குதற்குமுன்னும் பலவாயுயர்ச்சி தாழ்ச்சியுடையனவாகையால், ஒன்றுக்கொன்றதிசயமும், உடையனவாம். ஆகவின், அவை துக்கமேயன்றிசசுகமல்லவென்பதூஉம், இன்பம் அடைதற்குரிய சாதனம் இற்றென்பதூஉம், அச்சாதனத்தைக்கொண்டு சாதித்தின் புறுதற்குரியார்சிவரென்பதூஉம், சாதகஞ் செய்யுமாறிவ்வியல்பிற் றென்பதூஉம், அதனல், இன்பப் பெரும் பேறியைந்தோரிவ் வியல்புடையாரென்பதூஉம்,இம்முறையன்றிப்,பேதாபேதம் சாதித்தலே,தமக்குப் பெரும் பயனென மேற்கொண்டொழுகும், வாதிகள், பேரின்பமடையார்களென்பதூஉம், முறையே கூறிய வாறேயாமென்றுணர்க.

பிரணவாதி மந்திரானுட்டானங்களால் ஈச்சுரப் பிரசாதமுளதா மென்று சுருதிகள் கூறுகின்றன. (அவற்றுள்.) வேத சிவாகம புராணஇதிகாசமுதலியவைகளில், பஞ்சாக்கர மந்திரமே முத்தி சாதனமென்றும், அப்பஞ்சாக்கர மந்திரத்தின் பாகுபாடிவ்வியல்பிற்றென்றும், அதன் மகிமை யித்தன்மைத்தென்றும், கூறப்பட்டிருக்கின்றது. சைவசமய குரவர்கள் திருவாய்மலர்ந்தருளிய, தமிழ் வேதமாகிய திருப்பதிகங்களிலும், பஞ்சாக்கரத்தினியல்பு முதலியவைகள், மிகவும் புகழப்பட்டிருக்கின்றன. அப்பதிகங்களிற், காதலாகிக்கசிந்

துகண்ணீர்மல்கி, என்கிற பாசுர முதலியவற்றுட் பஞ்சாக் கரத்தின் சிறப்பும், அதை யோதுபவருக்கின்றியமையா நற் குணங்களும், அவர்கள் விலக்கவேண்டிய தீக்குணங்களும். அன்னோரடையும் பயனுங் கூறப்பட்டிருக்கின்றன, ஆதலாற் பஞ்சாக்கர முதலிய மந்திரங்களின், நுட்பங்களைநல்லொழுக் கமுள்ள நல்லாசிரியரை வழிபட்டுணர்க.

தமிழ் வேதமாகிய தேவார முதலிய திருவருட்பாத்திரு முறைகளின் மஹாமகிமையை விளக்கும் திருப்பாடல்களா வன, (வைராக்கியசதகம்) ஒழித்திடும் பவப்பகை விரைந்துள் ளமே யோது மூதுணர்வோர், பழிச்சுபாடலை, (எ-ம்,) ஸ்ரீதத் துவராய சுவாமிகள்) ஒழிவிலருண்மாது திருமுலையினூறும், உணர்வு பரபோதவமுதுண —மொழியின் மணநாற வருளு மறைஞானமுனிவர் தமிழ் மாலை வாழியே, (எ-ம்,) பாதமுடி தேடிருவர்பாலு மணுகா வொருவர் பாதமலர் சூடியருள் பெறு—நாதனருளாலவனி வீடுபெறவோது தமிழ், நாவரசர் பாதமது வாழியே, (எ-ம்,) நினைவினரிதாகி நெறியினெளி தாகு நிமல நிறைவான பொருளை, என்ற பாட்டில் தூதுமறு கினிடையேவும் விமலர் தமிழ்மாலை வாழியே, (எ-ம்) வாசகத் தாலாவியை நின்றுருக்கும், ஞானமதயானை வாதவூர் வள்ளல் (எ-ம்) கதியதிதுவாகுமெனமுயலு காம,கருமிகள் கணுதர் கபி லமாக், கணிகர் மதியாளர் அருகர் முதல்வாதர், கலைகள் கத ருது, இறைவர்தாள், முதிய தமிழ்மாலையருள வருகாழி, முரு

கர் மறைஞான முனிவர்மால் முடிவறிவில் பாதமுளரிகொடு ஊது, முதல்வர் தனிபோக மொழிகுவார், அதிகைநகர்நாதரரு ளுதிருநாவி, னரையரிறையாளுமியல் பொருசமுது கவிபாடி யருளு திருவாதையதிபர், சடகோபர் துதிகளே, மதிசெய வெந்நாளும், (எ-ம்) கூறப்பட்டுள்ள. (திருப்பாடல்களும்) அன்றி, ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் முதலியோர் அருளிச் செய்திருக்கும், நால்வர் நான்மணிமாலை முதலிய நூல்களுட் கூறப்பட்டுள்ள திருப்பாடல்களும், அன்றியும், ஸ்ரீ அருணகிரி நாதர்—ஸ்ரீபட்டினத்தடிகள், சிவஞான வள்ளலார், ஸ்ரீதாயு மான சுவாமிகள், முதலிய பெரியோர்களாற் கூறப்பட்டிருக் குந் திருப்பாடல்களும், அன்றி, மற்றும் வருவனவற்றுனுங் காண்க.

வேதாந்த விசாரஞ்செய்து இன்ப வீடடைய விரும்பும் அன்பர்கள், மேற்கண்ட திருப்பாடல்களின் உண்மைப் பொருளை யுய்த்துணர்க.)

வேதாகமங்களில், விலக்கப்பட்ட, மதுமாமிசவுணவுகளை யொழித்து, நல்வழியிலொழுகும் அன்பர்களே, தேவார முத லிய தமிழ்வேதம், ஓதுவதற்கும் கேட்பதற்குமுரியார், என்று பெரியார் அருளிச் செய்திருக்கிறூர்கள், ஆதலால், அன்பர்க ளிவற்றைக் கவனிக்கவேண்டுமென்று திருவருளைச் சிந்திக் கின்றேன்.

சன்மார்க்கத்தை விரும்பும், அன்பர்களுக்குப் புத்தகம் விலையின்றிக் கொடுக்கப்படும்.

முதற்பாகம்போல நல்ல கடிதத்திலச்சிடும்படி ஏற்பாடு செய்த பிரகாரம் செய்வதற்குப் பட்டினத்திலுள்ள கடித வர்த்தகர் தன்னை வஞ்சித்துவிட்டதாய் யந்திரசாலைத்தலைவர் கூறுகின்றபடியால், இனி, இரண்டாம் பதிப்பிற் றிடமான கடிதத்திற் பிழையறப் பதிப்பித்து அன்பர்களுக் களிக்கப் படும்.

சத்திய சன்மார்க்கப் பிரகாசிகை,

இரண்டாம்பாகம்,

முற்றுப் பெற்றது.

சற்குருபாதம்வாழ்க.